தொழில்

இந்த இதழில்

15—5—60

கல்வியும் கடமையும்	...	3
சலவையாளருக்கு உதவி	...	5
காலத்திற்கேற்ற மாறுதல்	...	6
காணாதன கண்டேன்	...	17
மலைக்குகை மர்மம் (தொடர் கதை)	...	20
எண்ணைத் தொழிலின் தந்தை	...	28
ஆளிலாப் பொறிமுறையும், அதன் விளைவுகளும்	...	35
மணமகன் தந்த பரிசு	...	44
தவறிய கடிதங்கள்	...	49
இதய ஓவியம்	...	57
கலை மணம் (சினிமா விமரிசனம்)	...	66

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

M. A. MANICKAVELU,
Minister for Revenue and Health

Fort St. George
MADRAS.

ஆசிரியருக்கு,

சிறு தொழில் வளர்ச்சிக்காக தங்கள் "தொழில்" சஞ்சிகை இதுவை ஆற்றிய பணியை தொடர்ந்து செய்து வரும் என நம்பு றேன். தங்கள் சஞ்சிகையின் இ ண்டாம் ஆண் மலர் சிறந்து வி ங்க என் வாழ் துக்களைத் தெ வித்துக் கொள் றேன்.

அன்புள்ள
M. A. மாணிக்கவே

நன்றி

"தொழில்" பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு சிறப்புமலருக்கு வாழ்த்துச்செய்திகள் அனுப்பிய மத்திய மாநில அமைச்சர்களுக்கும், அதிகாரிக ளுக்கும், கதை, கவிதை, கட்டுரைகள் எழுதி ஆண்டு மலர் சிறந்தமுறையில் வெளிவர ஒத்துழைத்த ஏனைய பேரறிஞர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர்.

" அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்.

மலர் 3	சென்னை, 15—5—'60	இதழ் 2

கல்வியும் கடமையும்

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பது பழமொழி. இந்திய விடுதலைக்குப் பிறகு யாவரும் வியக்கத்தக்க முறையில் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி முன்னேறி இருக்கிறது. ஆயிரக்கணக்கில் ஆரம்பப்பள்ளிகள் நாடெங்கும் பெருகி இருப்பதைக்கண்டு நாம் பூரிப்படைகின்றோம்.

தமிழ் நாட்டின் தெருவெல்லாம் கல்வி முழக்கம் செழிக்கச் செய்த சென்னை அரசாங்கத்தை நாம் மனதாரப்பாராட்டுகின்றோம். கல்வி ஆர்வம் கரைபுரண்டு ஓடுகின்ற இந்த நேரத்தில், தொழில் இதழ் பின்தங்கிய மக்களின் வாழ்வுக்காகப்பாடுபட்டுவருகிறது என்பதை வாசக அன்பர்கள் அறிவார்கள்.

இன்று ஏழைமக்களுக்கு ஒரு சோதனைக்காலம் என்றே சொல்லவேண்டும். பள்ளிகள் பெருகப் பெருக பணக்காரர்கள் தங்கள் பிள்ளைகளை "கான்வென்ட்" என்று அழைக்கப்படுகிற பள்ளிகளில் சேர்த்துத் தங்கள் குழந்தைகளின் கல்வித்தரம் குறையாமல் பார்த்துக்கொள்ளுகின்றனர். அவர்களுக்கு இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் ஒன்றுதான். பல்லாயிரக்கணக்கான தொழிலாளி விவசாயி குழந்தைகள் அரசாங்க இலவச பள்ளிகளில்தான் பயில வேண்டி இருக்கிறது.

குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம்போன்ற பின் தங்கிய பகுதிகளில் இப்பொழுது பள்ளிக்கூடம் இல்லாத சிற்றூரே இல்லை என்னும் அளவுக்கும் பள்ளிகள் பெருகி இருக்கின்றன.

208325

சென்ற ஆண்டு தமிழ் நாட்டுக்கு வந்திருந்த நம் பிரதமர் நேரு அவர்களும் தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சியையும் பள்ளிச் சீர் அமைப்பு மத்ய உணவு திட்டங்களையும் வெகுவாகப் பாராட்டினர்.

பொதுமக்களுக்கு ஒன்று அறிவுறுத்தவேண்டியது நமது கடமை. முன்பெல்லாம் அங்கொன்றும் இங்கொன்று மாக ஒரு மாவட்டத்துக்குச் சுமார் நூறு பள்ளிகள் இருக்கும். அந்த நேரத்தில் கல்வி அதிகாரிகள் நேரடியாகக் கவனித்து பிள்ளைகள் கல்வித்தரம் குறையாமல் பார்த்து வரவசதி இருந்தது. பிள்ளைகளும் மிக்க குறைவாக இருந்ததால் ஆசிரியர்களும் மாணவர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முடிந்தது. இன்று அவ்வாறு முடியுமா? நாட்டின் கல்வி வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட அத்தனைபேரும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பள்ளிகளில் இடம் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. கல்வி அதிகாரிகளுக்கு தங்களுக்குக் கீழே எத்தனை பள்ளிகள் இருக்கின்றன என்றே சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் கல்வியின்தரம் குறையாமல் உயர்ந்து கொண்டுபோக முடியுமா? இதற்கு அரசாங்கத்தைக் குறை கூறிப்பயனில்லை. எதிர்கால இந்தியாவை உருவாக்கும் இந்தக்குழந்தைகளின் கல்வித்தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு மனிதனின் பொறுப்பாகும்.

தங்கள் பிள்ளைகள் ஒழுங்காக பள்ளிக்குப்போகிறார்களா. என்று கவனிக்கவேண்டும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் ஒழுங்காக கற்பிக்கின்றார்களா! என்றும் பார்க்க வேண்டும்.

மத்ய உணவு திட்டம் சரியாக நடப்பதில்லை என்று குறை கூறினால் மட்டும் தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று நினைக்க கூடாது. குறைகளைக் கண்டு திருத்த வேண்டும். நேர்மையான வழியில் ஒரு கிராமமே ஒன்று திரண்டு திருத்த முடியாது இருக்குமானால் அதைப்பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவித்து ஆவன செய்யலாம். மக்களாட்சி மாட மாளிகையிலிருந்து குடிசைக்கு மாற்றப்பட்ட

பிறகும் நாம் மறுபடியும் அடிமை வாழ்வுக்கு வித்திடுகின்றோம் என்று எண்ணிக் கண்ணீர் வடிப்பதைத்தவிர வேறு வழி இல்லை.

பொதுமக்களுக்குக் கூறுவதெல்லாம் உங்கள் குழந்தைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர பாடு படுங்கள். நாடாள வேண்டிய அவர்கள் கல்வித்தரம் நலியாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இது உங்கள் கடமைகளில் முக்கியமானது.

சலவையாளருக்கு உதவி

சென்னை மாநிலத்திலுள்ள சலவையாளர்களில் பெரும்பாலோர் தங்கள் பூர்வீகத் தொழிலையே நம்பி வாழக் கூடியவர்கள். ஒரு சில பணவசதியுள்ளவர்கள் விஞ்ஞான ரீதியிலான சலவை முறையை (Dry cleaning) கையாளுகின்றனர். அத்தகைய நவீன முறையை கையாளுவதால் பரம்பரை முறையில் தொழில்செய்பவர்களை பெரிதும் பாதிக்கின்றது என்பதை நமது அமைச்சர்களும், அதிகாரிகளும் நன்கு அறிவார்கள்.

ஏழைமக்கள் நிரம்பிய சலவையாளர்கள் தங்கள் தொழிலுக்குத் தேவையான பொருள்களான சோப்பு, நீலம், வாசிங்சோடா முதலியவைகளை முன்னர் குறைந்த விலையில் பெற்று வந்தனர். ஆனால் விலை ஏற்றம் காரணமாக தற்பொழுது அவர்கள் அப்பொருள்களை வாங்கி தொழிலை நடத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். அவர்கள் ஏழைகள், வசதியற்றுவாழக்கூடியவர்கள், உத்தியோகமற்றவர்கள், அதிகமானவர்கள் கல்விஅறிவு இல்லாதவர்கள். ஆகவே குளம், வாய்க்கால், குட்டைகளில் தேங்கி நிற்கும் அசுத்தமானநீரை நம்பியே வாழ்கின்றனர், தங்கள் வாழ்கையை நடத்துக்கின்ற நிலையில் இருக்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே! இத்தகைய நிலையிலிருக்கும் இம்மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், நிரந்தரமாகத் தொழில் செய்யவும் தேவையான வசதிகளை அரசாங்கம் செய்து தரவேண்டும். அவர்களின் தொழிலுக்குத் தேவையான பொருள்கள் சரிவரகிடைப்பதில்லை என தமிழ்நாடு சலவையாளர் சங்கத்தின் மூலம் தெரியவருகிறது. தேவையான பொருள்களை நியாய விலையில் கிடைக்கவும், தண்ணீர்கிடைக்க வசதிகள் செய்யவும், தண்ணீர்வசதியுள்ள இடங்களில் சலவைத்துறைகள் (Dhoby Gana) கட்டவும், அரசியலார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற சலவையாளர் கோரிக்கை அவசியமானதும், நியாயமானதும், என அனைவரும் அறிவோம்.

ஆகவே அவர்கள் கோரிக்கை நிறைவேறும் வகையில் மாநில அரசாங்கத்தார் மத்திய அரசாங்கத்தை அணுகி தேவையான ஏற்பாடுகளை செய்யத்தக்க நடவடிக்கைகள் எடுத்து சலவையாளர் குறைகளை போக்கவேண்டும் என தொழில் வற்புறுத்துகிறது.

காலத்திற்கேற்ற



சென்னை ராஜியத்தில் இருக்கும் சிறு சிறு தொழிற்சாலைகளை ஒன்று சேர்த்து சகல சிறு தொழில்களை ஊக்குவிக்கவும் அவ்வத் தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களைத்தந்து, அதற்கு வேண்டிய மூலதனமும் கொடுத்து, ஒரு சில இடங்களில் தனித்தனியே தொழில்கள் வளர்ந்து வருகின்றன என்பதை நாம் இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

உதாரணமாக பல வசதியற்ற நிலையில் ஏனைய சிறு தொழில் செய்வோர்கள் கட்டுப்பாடான முறையிலும் கட்டுப்பாடான ரீதியிலும் அமையாதது தான், சிறுதொழில் உற்பத்தியாளரின் தற்போதை நிலைமையாகும்.

பல ஆண்டுகளாக சிறு தொழில்கள் மேற்சொன்ன வகையில் மூன்று முக்ய பிரிவோரும் மத்ய, சென்னை சர்க்கார்களின் உதவிகள் கிடைத்தும் அதைக் காலம் சமயத்துக்கும் ஏற்றமாதிரி பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டதனல் பல தரப்பட்ட சிறு தொழில்கள் கீழான திசையிலே பின் தங்கி நசிந்து இருக்கின்றன.

இந்திய, சென்னை சர்க்கார்களும் தீவிரமாகக் கலந்து ஆலோசித்து காலத்துக்கு ஏற்றவாறு தங்

மாறுதல்

கள் கொள்கையில் மாறுதல்கள் செய்து, எந்த விதமான சிறு தொழில்கள் இருந்தாலும் ஏனைய சிறு தொழிற்சாலைகளை ஒன்று திரட்டி கூட்டுறவு முறையில் அமைத்து, அந்தந்த தொழிலுக்கேற்ற வகையில் காலங் கடத்தாமல் நேரிடையான உதவிகள் செய்ய நம் அரசினரும் அதிகாரிகளும் முன் வந்திருக்கின்றனர்.

சிறு தொழில் செய்வோர்கள் அபிப்பிராய பேதமின்றி அவரவர்கள் ஸ்தாபனத்தில் வித்தியாசமின்றி கட்டுப்பாடான முறையில் கூட்டுறவு சங்கத்தை அமைத்து பதிவு செய்து அதன் கீழ் ஒன்றுபட்டு செயலாற்ற சகல சிறு தொழில் உற்பத்தியாளர்களும் முன்னுக்கு வரவேண்டும்.

இந்திய, மாகாண சர்க்கார்களின் உதவி தொழில் உற்பத்தியாளர்களுக்கு கடந்த காலத்தில் அதிகமாகப் பெற்று அபிவிருத்தி அடைந்திருக்கின்றனர். அது பாராட்டற்க்குரிய விஷயம். அது போல் சிறு தொழில் செய்வோரும் நேரிடையான உதவி பெறுவதற்கு போதிய வழி வகை முதலியன தெரியாமல் தவிக்கின்றனர்.

சர்க்கார் இவைகளை நன்குணர்ந்து தான் உதவிகள் உண்மையிலேயே சிறுதொழில் செய்வோருக்கு கிடைக்கவேண்டுமென்றால் சிதறியுள்ள

சிறு தொழில் உற்பத்தியாளர்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்குக் கூட்டுறவு சங்கத்தின் மூலம் உதவி செய்ய முன் வந்திருக்கின்றனர். அந்த அடிப்படை யான திட்டத்தை நினைத்துப் பார்க்கும்போது உதாரணமாக நகரங்களில் மட்டும் தொழிற்சாலை கள் வளர்ந்தால் மட்டும் போதாது.

நம் நாட்டு மக்கள் பெரும்பாலும் ஏழைமக்கள். அதிலும் தன் தன் கிராமத்தையே நம்பி வாழக் கூடிய பெருமக்கள் வாழும் பெரும் கிராமங்களில் சிறு சிறு தொழில் உற்பத்தி அவசியம் என்று கருதிதான் ஒவ்வொரு கிராமத்திலும் கிராம மக்க ளுக்கு ஏற்றவாறு சிறு தொழிற் சாலைகளை ஆரம் பிக்க வேண்டுமென்று மத்ய மாநில சர்க்கார்கள் முன் வந்திருக்கின்றனர்.

இதை நினைக்கின்றபோது காலத்துக்கேற்ற மாறுதல்கள் மக்கள் நினைக்கின்றார்கள். மக்களின் ஆதரவைப்பெற்ற இந்திய மக்கள் சர்க்கார் நன் குணர்ந்து கூட்டுறவு சங்கத்தை ஆங்காங்கு அமைத்து எளிதான முறையில் நடைபெற வேண் டிய சட்டங்களை (act) திருத்துவதென்று கூட முடிவு செய்திருக்கின்றார்கள். அப்படி எளிதான முறையில் திருத்தி அமைத்தால் சிறுதொழில் உற்பத்தியாளர் கள் தங்கள் திறமைக்கு ஏற்றவாறு தொழிற்சாலை களை நிர்ணயம் செய்து அங்குள்ள மக்களைக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கி வேலையின்றி இருக்கும் உழைப்பாளிகளுக்குத் தகுந்த வேலை கிடைக்க முடியும். அதன் மூலம் உற்பத்தி பெருகும் வாய்ப்பு அதிகம் ஏற்படும்; சொந்தக் கிராமங்களி லேயே மக்கள் தங்கி வாழ விரும்புவார்கள். நகரங் களை நோக்கி பிழைப்புக்காக கிராமத்தை விட்டு வெளியேறும் நிலை மாறும்; நாட்டுப் பொருளாதரம் பெருகும்; நாடு சுபீட்சமடையும்.

இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் சிறுதொழில்களுக்கு அதிகப்படி எவ்வளவு மூல தனம் இருக்கவேண்டுமென்று முடிவு செய்வது அவசியம். அதே நேரத்தில் முழுதும் கையால் செய்கின்ற கைத்தொழில்களும், மின்சாரம், பெரிய இயந்திரங்களின் உதவியால் செய்கின்ற இயந் திரத்தொழில்களும் குடிசைத் தொழில்கள் ஆகுமா? இதைச்சிந்திக்கவேண்டுகிறேன்.

'பெய்' என்றால் மழை பெய்யும் காலம் வரும்!

பருவ நிலை பற்றி அறிய அமெரிக்கா அனுப்பியுள்ள முதலாவது செயற்கைக் கோளமான 'டைரோஸ்' தற்போது விண்வெளியில் பூமியைச் சுற்றி வலம் வருகிறது. இவ்விதக் கோளங்கள் பலவற்றை அனுப்புவதன் காரிய சாத்தியம் பற்றித் தீர்மானிப்பதும், உலகின் பருவ நிலை பற்றி இடையறாது தகவல் சேகரிப்பதுமே இக்கோளம் அனுப்பப்பட்டதன் நோக்கம்.

பருவ நிலை மாறுதல்களுக்கான காரணங்கள், அவற்றைக் கட்டுப் படுத்துவதன் சாத்தியம், நெடுங்காலத்துக்கு முன்னதாகவே பருவ நிலை பற்றித் திட்டமாகக் கூறுதல் முதலியன பற்றி விஞ்ஞானிகள் நன்கறியப் பருவ நிலைக் கோளங்கள் பல உதவும்.

அமெரிக்கா அனுப்பியுள்ள புதிய டைரோஸ் ஒரு சோதனைக் கோளமே என்றும், அது மூன்று மாத காலத்துக்கு மட்டிலுமே இயங்குமென்றும் தேசிய விமான இயல் விண் வெளி நிர்வாகம் (நாஸா) வலியுறுத்தியது. பருவ நிலை பற்றி அறிந்து கூறும் முறையான கோளம் அது அல்ல என்றும் அதிகாரிகள் கூறினர்,

270 ராத்தல் எடை

270 ராத்தல் எடையுள்ள 'டைரோஸ்' கோளத்தில் தொலைக் காட்சி (டெலிவிஷன்) புகைப்படக் கருவிகள் இரண்டு உள்ளன. மேகங்களின் மூடாக்கு பற்றிய புகைப்படங்களை அவை பூமியிலுள்ள நிலையங்களுக்கு அனுப்பி வருகின்றன. ஒவ்வொரு புகைப்படக் கருவியும் சாதாரண தண்ணீர் கிளாஸ் அளவுள்ளவை.

"சூறாவளி, புயல் இவை தோன்றப் போவது அல்லது தோன்றி விட்டது பற்றிய மேக அமைப்புப் படங்களை வானிலை ஆராய்ச்சியாளர்களுக்கு 'டைரோஸ்' அனுப்பும் படங்கள் தெரிவிக்கும்; மற்றப் பருவ நிலை மாறுதல்களையும் தெரிந்து கொள்ளலாம்" என்று நாஸா அதிகாரி ஒருவர் கூறினார். "இந்தப் புகைப்படங்களை ஆராய்வது பருவ நிலைகளுக்கான காரணங்களை ஆராய்ச்சியாளர்கள் நன்கு தெரிந்துகொள்ள உதவும்" என்றார்.

உலகம் முழுவதன் வானிலை பற்றிய தகவல்கள் கொடுக்கக் கூடிய செயற்கைக் கோள் ஏற்பாடு ஒன்றை உருவாக்கும் நீண்ட காலத்திட்டத்தின் ஒரு பகுதியே 'டைரோஸ்' கோளத் திட்டம். ஆராய்ச்சி செய்வதற்கு உலகம் முழுவதன் வானிலை பற்றிய பதிவுகளை எப்போதும் தம்மிடம் தயாராக வைத்திருப்

படுதே வானிலையாளர்களின் இறுதி நோக்கம்.

பருவ நிலை பற்றி இவ்விதத் தகவல்கள் தொகுப்பு, பருவநிலை பற்றி நாம் நன்கறிந்து கொள்ளவும், ஒரு வேளை பருவ நிலையைக் கட்டுப்படுத்துவது பற்றிய சில கருத்துக்களை உருவாக்கவும் உதவும்.

பூமத்திய ரேகைக்குத் தெற்கிலுள்ள எல்லாநாடுகளின் நிலப் பரப்புக்கும் பூமத்திய ரேகைக்கு வடக்கில் மாண்ட்ரீல், பாரிஸ், பபிரேக். கார்க்கோவ் ஆகிய நகரங்கள், வட ஜப்பானியத் தீவுகள் வரையுள்ள நிலப் பரப்புக்கும் மேலேயுள்ள வானிலை மண்டலம் செயற்கைக் கோளின் எல்லைக்குள் வரும்.

மேகங்களைப் படம் எடுத்தல்

டைரோஸிலுள்ள தொலைக் காட்சிப் புகைப் படக் கருவிகளில் ஒன்று மேகப் பரப்புக்களில் 800 மைல் தூரம் வரைப்படம் வரைக்க வல்லது. இந்தப் புகைப்படக் கருவியின் வரம்பில் வரும் சிறிய மேகப் பரப்புக்களை இரண்டாவது புகைப்படக் கருவி படம் பிடிக்கும்.

நியூ ஜெர்ஸி, பேர்ட்மான் மவுத்திலும் ஹாவாய், பேனு முனையிலுமுள்ள இரு நிலையங்கள் புகைப்படங்களைப் பெறவும், கோளத்திலுள்ள ஒரு பரப்புக் கருவிகளை இயக்கவும் நிறுத்தவும் ஆற்றலுள்ளவை.

மேற் சொன்ன நிலையங்களின் வரம்புக்குள் செயற்கைக் கோளம்

போன் : 31738
தந்தி : மெரிகோல்ட்

தொழில்

மாதமிருமுறை

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3,

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளிநாடு	8—0—0

வரும்போது, அதுதான் பார்த்தவற்றை அரை விநாடிக்கு ஒரு படம் வீதம் பூமிக்கு அனுப்ப முடியும். 'கினிஸ்கோப்' என்னும் படத்திரைகளில் அப்படங்கள் தெரியும். அவற்றை உடனே பார்க்கலாம்; படம் பிடிக்கலாம்.

நிலையங்களின் வரம்புக்கு வெளியில் கோளம் செல்லும்போது அது எடுக்கும் படங்கள், ஒரு காந்த நாடாவில் பதிவாகிறது; அது 32 படங்கள் வரைப்பதிவு செய்யமுடியும். அவை கோளம் விண் வெளியில் குறிப்பிட்ட இலக்குகளில் செல்லும்போது எடுக்கப்பட்ட படங்கள்; பின்பு பூமிக்கு அனுப்பிவைக்கப்படும்.

நிலையங்களின் படப் பதிவு வரம்புக்குள் கோளம் மொத்தம் 12 நிமிடம் பயணம் செய்கிறது. ஒவ்வொரு புகைப்படக் கருவியும் நாடாவிலுள்ள படங்களைப் பூமிக்கு அனுப்ப 3½ நிமிடம் ஆகிறது; பாக்கி 2½ நிமிடத்தில்

வைத்ய ரத்னம் P. S. வாரியார் அவர்களின்

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல் (கேரள ராஜ்யம்)

ஸ்தாபிதம்—1902 போன் நெ. 44 (திரூர்)

கிளைகள்

கல்லை ரோடு, கோழிக்கோடு, (போன் : 155)

ஈரோடு (முனிசிபல் பஸ் ஸ்டாண்டிற்கு எதிரில்) (போன் : 172)

வடக்கன்தாரா பாலக்காடு (போன் : 104)

மகாத்மாகாந்திரோடு, எர்ணுகுளம் (போன் : 674)

விற்பனை டிப்போவெற்றிலைக் குளம்ரோடு திரூர் (போன் : 31)

ஸ்டாச்யூரோடு, திருவனந்தபுரம்) (போன் : 3924)

கோட்டக் கல்லிலுள்ள எங்கள் தலைமை ஆபீஸிலும் கிளைகளிலும் தரமான ஆயுர்வேத மருந்துகள் கிடைக்கும். தபால்மூலம் வைத்திய சம்பந்தமான யோசனைகள் கோட்டக் கல்லிலுள்ள எங்கள் பிரதான வைத்தியர் அளிப்பார்.

கோட்டக்கல் கோல்டன் ஜூபிலி நர்ஸிங் ஹோமில்

பிழிச்சல், நவரக்கிழி, முதலான விசேஷ சிகிச்சைகள் எங்கள் பிரதான வைத்தியர் மேற்பார்வையில் நடைபெறும்.

படங்கள் நேரடியாகப் பூமிக்கு அனுப்பப்படுகின்றன.

உலகப் பயணத்துக்கு 1½ மணி நேரம்

செயற்கைக் கோள் நிலை-நிலையங்கள் அனுப்பும் தகவல்களின் உதவியுடன் நாடாப் படங்களிலுள்ள மேக மூடாக்குகள் பூமிக்கு மேல் எந்த இடத்தில் படம் பிடிக்கப்பட்டவை என்பது துல்லியமாகத் தீர்மானிக்கப்படுகிறது. குறிப்பிட்ட நேரத்தில் எடுக்கப்பட்ட படம் எது என்பதை அறியும் விஞ்ஞானிகள், படத்தையும் கோள் நிலை - அறி-நிலையங்கள் தரும் தகவல்களையும் சேர்த்துப் பார்த்து படம் பூகோளத்தில் எங்கு எடுக்கப்பட்டதென்று முடிவு செய்கின்றனர். இவ்வாருக, செயற்கைக் கோளம் ஒரு முறை வலம் வரும் காலத்தில் அல்லது ஏறக் குறைய ஒன்றரை மணி நேரத்தில் பூமிக்கு மேலேயுள்ள மேக மூடாக்கு பற்றிய ஒரு பொதுவான படத்தைத் தொகுக்கக் கூடியவர்களாக விஞ்ஞானிகள் இருக்கின்றனர்.

ஆராய்ச்சி செய்யப்பட்டபின் படங்களை 'நாஸா' பிற நாடுகளுக்கு வழங்கும்; அதாவது சர்வதேச விண்வெளி நிலையத்தின் விண்வெளி ஆராய்ச்சிக் குழு (காஸபார்) உறுப்பினர்களுக்குப் படங்கள் வழங்கப்படும்.

அறிக்கை

காங்கிரஸ் அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு:—

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி "காங்கிரஸ் செய்தி" என்ற மாதமிருமுறை பத்திரிகையை நடத்தி வருகின்றது.

விறுவிறுப்பான தலையங்கங்கள்; திராவிட முன்னேற்றக்கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திரக் கட்சி, ஆகியவை பற்றிய காரசாரமான விமரிசனக் கட்டுரைகள்; எதிர்கட்சியினரின் அவதூறுகளுக்குத்தக்க பதில்கள்; நமது ஆட்சியிலே புரிந்த சாதனைகளைப் பற்றிய புள்ளிவிவரங்களோடு கூடிய எழுத்துப் படையல்கள்; காங்கிரஸ் தலைவர்களின் அரிய சொற்பொழிவுகள்; கட்சிகளைப்பற்றிய செய்திகள், அறிக்கைகள்.

ஆகியவை இந்தப்பத்திரிகையிலே, நிரந்தரமாக இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் திரு எஸ். என். ஏ. அஜீஸ், பி. ஏ. பி. எல். அவர்களும், "தேசீய முழக்கம்", "சிந்தனை" முதலிய பத்திரிகைகளில் எழுதி வந்த திரு கருப்பையா பி. ஏ. அவர்களும் தொடர்ந்து எழுதி வருவார்கள்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி நடத்தி வரும் இப்பத்திரிகையை எல்லா அன்பர்களும் படிக்க வேண்டுகிறேன்.

ஆண்டு சந்தா ரூபாய் 3/- இதை "நிர்வாகி, காங்கிரஸ் செய்தி 111, மௌண்ட் ரோடு, சென்னை-6", என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கக் கோருகிறேன்.

ஓ. வி. அளகேசன்.

தலைவர்.

மண்பாண்ட உற்பத்தியாளர் கூட்டம்

சென்னை மாவடி விநாயகர் கோயில் தெருவில் 5—5—60 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு சென்னை ராஜ்ய மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்தலைவரும் தொழிலாசிரியருமான ஸ்ரீ. கே. பெருமாள் உடையார் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ. என். துரைராஜ் அவர்கள் கூட்டத்திற்கு வந்தவர்களை வரவேற்றும், பாராட்டியும் பேசினர். தலைவர் தன் முன்னுரையில் மண்பாண்ட உற்பத்தியாளர்களின் கஷ்டங்களை விளக்கமாய்ப் பேசியபின்னர், சிதம்பரத்திலிருந்து வெளிவரும் "வேட்கோவன்" பத்திரிகைக்கு மண்பாண்ட உற்பத்தியாளர் அனைவரும் சந்தாதாரராக சேர்ந்துவேட்கோவன் பத்திரிகைவளர்ச்சிக்கு உதவிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

வித்வான் எஸ். விஸ்வநாதன் அவர்க்ள் சென்னை அரசினர் செய்கின்ற நன்மைகளை விளக்கிப்பேசினர்கள். அரசினர் செய்யும் உதவிகளையும் அரிய கருத்துக்களையும் வேட்கோவனில் வெளியிட வேண்டுமென்று வேட்கோவன் ஆசிரியர் கே. முத்துகுமாரசாமி கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ. வி. சிங்காரம், அவர்கள் மண்பாண்ட உற்பத்தியாளர்கள் அனைவரும் கட்டுப்பாடுடன் ஒன்றுபட்டு தொழிலை நல்ல முறையில் அபிவிருத்திசெய்து வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திரு. எஸ். திருநீலகண்ட உடையார் அவர்கள், மண்பாண்ட உற்பத்தியாளர்கள் அனைவரும் கூட்டுறவு சங்கத்தில் ஒன்று சேர்ந்து, கூட்டுறவு சங்கத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும், அதன் மூலம் சர்க்காரிடம் வசதிகளைப் பெற்று நல்வாழ்வு வாழவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திரு. வ. உ. சி. சுப்பிரமண்யம் வேட்கோவன் பத்திரிகை நல்லமுறையில் அரிய கருத்துக்களை கொண்ட வடிவத்தில்வெளிவருவதை நான் பாராட்டுகின்றேன். அதற்கு மண்பாண்ட உற்பத்தியாளர்களும் வேண்டிய ஆதரவு தந்து வேட்கோவன் வளர்ச்சியில் ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் இந்திய—மாநில சர்க்கார் உதவிகளை பெற்று மண்பாண்ட உற்பத்தியாளர்கள் அனைவரும் கட்டுப்பாடுடன் இருந்து மண்பாண்டத் தொழிலை நாகரீக முறையில் புதுபுது நவ நாகரிகமானசாமான்களை உற்பத்தி செய்து பொதுமக்கள் அதிகமாக வாங்கி உற்பத்தியை விருத்திசெய்யவேண்டும். பாத்திரங்கள் கவர்ச்சிகரமானதாக இருந்தால் ஜனங்கள் அதிகமாக

வாங்குவார்கள். மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு சிறந்த முறையில் ஆலோசனையை கூறுவதற்காக வேட்கோவன் வெளிவந்திருக்கின்றது. வேட்கோவன் பத்திரிகையை அதிகமாக வசங்கிப்படித்து பயனை அடையும்படி அனைவரையும் கேட்டுக்கொண்டார்.

சிதம்பரம் சுந்தரேசன் அவர்கள் வேட்கோவன் பத்திரிகை நோக்கத்தை விளக்கியும், கட்சி சார்பற்ற முறையில் வேட்கோவன் வெளிவருகிறது என்றும் ஆளும் கட்சியின் ஆதரவின்கீழ் 'வேட்கோவன்' நடைபெறுகிறது என்றும் பேசினர்.

சிதம்பரம் வேட்கோவன் ஆசிரியர் முத்துகுமாரசாமி அவர்கள் வேட்கோவன் பத்திரிகையை பண்பாண்ட உற்பத்தியாளருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை அரசாங்கத்திற்கு எடுத்துக் காட்டி அறிவுறுத்தவே வேட்கோவனை நான் ஆரம்பித்திருக்கின்றேன். மண்பாண்டஉற்பத்தியாளர்கள் ஆதரவு என்பது அதற்கு அதிகமாகக் கிடைக்கும் பக்ஷத்தில் பத்திரிகை நடத்துவதால் உண்டாகும் துன்பங்கள் எதுவந்தாலும் நான் சகித்துக் கொண்டு விடாமுயற்சியுடன் வேட்கோவன் வளர்ச்சிக்கு உங்களின் ஏகோபித்த ஆதரவின் பேரில் தொடர்ந்து நடத்த முடிவு செய்திருக்கின்றேன். வேட்கோவனில் சிறுகதைகள், இலக்கியம், கவிதைகள் ஆகியவைகள் புதுபுது எழுத்தாளர்களுக்கு இடம் அளிக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றேன்.

ஆகவே சென்னை மாகில மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் ஆதரவும் தொடர்ந்து இருக்க ஆண்டவனைப் பிராத்திக்கொண்டு முடித்துக்கொண்டார்.

திரு. எம். தியாகராஜன் இறுதியில் சென்னை சர்க்கார் முதன் மந்திரி காம்ராஜ் தொழில் மந்திரி ஆர். வெங்கடராமன் ஸ்தலஸ்தாபன மந்திரி லூர்தம்மாள், உள்துறை அமைச்சர் பக்தவத்சலம் ஆகியவர்கள் மண்பாண்ட உற்பத்தியாளர் கஷ்டங்களை நிவர்த்திசெய்து வருகிறார்கள். இவர்கள் நான்கு பேர்களுக்கும் இக்கூட்டத்தின் சார்பில் நம் நன்றியைத்தெரிவித்துக்கொள்ள கடமைபட்டிருக்கின்றோம். கூட்டுறவு முறையில் தொழில் வளர்ச்சியுற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

வந்தவர்கள் அனைவருக்கும் வந்தன உபசாரம் சென்னை மாகில மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் காரியதரிசி திரு. எம். தியாகாராஜனல் கூறப்பட்டபின் கூட்டம் 9-30 மணிக்கு இனிது முடிந்தது.

அதிகாரம் மக்களிடத்தில் உள்ளது. அவர்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிந்து கொள்வோரிடம் அதனைத் தற்காலிகமாகவே ஒப்படைத்துள்ளனர்.

—காந்தி.



24-4-60ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேட்டூர் பிர்க்கா மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்திற்கு விஜயம் செய்த மாகாண சங்கத்தில் திரு. கே. பெருமாள் உடையார் அவர்களுக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டபோது எடுத்த படம்.

முன் வரிசை : கொழந்தையப்ப செட்டியார், செட்டிபட்டி, வி. தர்ம லிங்கம் செட்டியார், பி. ஏ. பி. எல். அட்வகேட் சங்க ஆலோசகர் சேலம், கே. பெருமாள் உடையார், மாகாண சங்க தலைவர் "தொழில்" ஆசிரியர் சென்னை, கே. ஏ. சுப்ரமணியம், சங்க ஆலோசகர் காங்கிரஸ கமிட்டி காரியதரிசி மேட்டூர் அணை,

பின் வரிசை: பி. சின்னப்ப செட்டியார், சங்க பொக்கிஷதார், மேட்டூர் அணை. வி. அருணகிரி செட்டியார், சங்க காரியதரிசி, மாகாண சங்க நிர்வாகி மேட்டூர் அணை. எஸ். காளியண்ண செட்டியார், சங்க உப தலைவர் மேட்டூர் அணை, எம். என், பழனியப்பன், சங்க நிர்வாகி மேட்டூர் அணை.

வேர்வை நாற்றத்துக்கு

லவ்—ஓ—பவுடர்.

இவ்வியாதி அக்குளில் (கமுகட்டி) உண்டாகிற துர் நாற்ற வியர்வையை சுரக்கச் செய்கிறது. சோப்பினால் கழுவினாலும், சென்ட்டினால் மறைத்தாலும் போவதில்லை. குளித்த பிறகு லவ்—ஓ—பவுடரை தன் இரு அக்குள்களிலும் பூசி வர வேண்டும்.

1 OZ டின் விலை ரூ 1-50. ஏக காலத்தில் 12 டின் ஆர்டருக்கு அவர்கள் ஊர் ஒப்படைப்புக்கு கொடுக்கப்படும். குரோஸ் ஆர்டருக்கு, விவரம் கேட்க்கவும். எந்த ஆர்டர்களுக்கும் முன் பணம் அனுப்ப வேண்டும்.

BEN & CO., MANNARGUDI

உங்கள் வியாபாரம் மேலும் பெருக

துணிப்பை, பட்டுத்திரை, படுதாக்கள், தலைகாணி உரை, ஆகியவைகளை, எல்லாவிதமான கலர்களிலும், உங்கள் வியாபார டிரேட் மார்க்கின்படியே நீங்கள் விரும்புமாறு தயாரித்துக் கொடுக்கிறோம்.

★

உங்கள் தேவைக்கு எழுதவும்

வெளியூர் ஆர்டரும் உடனடியாக கவனிக்கப்படும்.

T. S. ஜெயகோபால் செட்டி,

79, ஆச்சாரப்பன் தெரு, சென்னை-1.

காணாதன கண்டேன்!

[அ. வி. குப்புசாமி, எம். ஏ. டில்லி தமிழ்ச் சங்கம்]

பாண்டுகேச்வரத்திற்கு அடுத்த தங்குமிடம் ஹனுமான் சட்டி. மகாபாரத வீரனான பீமனுக்கும், ராமாயண வீரரான ஆஞ்சனேயருக்கும் தங்களது பலம் பற்றியதோர் போட்டி இங்கு நடந்ததாகப் புராணம். இரவு ஹனுமான் சட்டியில் தங்கி யிருந்து, அடுத்த தினம் மாலை பத்ரிநாத் ஆலயம் சேரலாம். இந்தப் பயணம்தான் மொத்த யாத்திரையிலும் மிகவும் கடினமானது. சுமார் 4000 அடி உயரம் ஏறவேண்டும். யாத்திரிகர்களின் பக்தி ஆழத்தையும், ஆண்டவனிடம் ஒன்றுபட்ட அவர்களின் மனநிலையையும் இங்குதான் நன்கு காணலாம். பலர் மிகவும் தளர்ந்து வாடி விடுகின்றனர். உடல் சக்தி ஒடுங்கிய போதும், அவர்கள் விடாமுயற்சியுடன் செல்வது அவர்கள் மனோசக்தியின் வேகத்தாலும், பத்ரிநாதனின் அருளினாலும் தான் என்பது இங்கு சந்தேகமறத் தெரிகின்றது.

மேலே ஏற ஏற குளிரும் அதிகரித்து, சுவாசம் விடுவதும் கஷ்டமாகத் தோன்றும். ஆனால் இவ்வளவுக்கும் பிரதிபலனாகத் தேவதர்சனி துவாரம் என்ற இடம் வந்ததும் கோபுர தரிசனம் போல நர-நாரயண சிகரங்களுக்கு நடுவே கோயில் தென்படும். அதைக் கண்டு மெய்மறக்கும் பக்தர்களின் ஜெய கோஷம் வானைப் பிளக்கும். கோயிலின் அருகு அடைந்ததும், என்னே இறைவனின் அருள்! சூடான நீரில் குளிக்க அந்த உயரத்திலும் ஓர் உஷ்ண நீர்ஊற்று! மழையானாலும் சரி, குளிரானாலும் சரி, வந்து சேர்ந்த யாத்திரிகர்களுக்கு ஆண்டவன் அருளும் முதல் பிரசாதம இந்த உஷ்ண நீர் ஸ்நானம். வழி நடந்த களைப்பும், கைகால் ஓய்வும் குளித்து எழுந்தவுடன் பறந்தோடிப் போகின்றன.

10,300 அடி உயரமானபடியால் பத்ரிநாத்தில் நல்ல குளிர். ஆகவே, கம்பளி உடைகளும், கனத்த போர்வைகளும் மிகவும் அவசியம். பத்ரிநாத்தில் தங்குவதற்கு சத்திரங்கள் இருக்கின்றன. இந்த க்ஷேத்திரத்தில் குறைந்தது மூன்று இரவுகள் தங்க வேண்டும் என்று இங்குவரும்

யாத்திரிகர்கள் நம்புகின்றனர்.

பத்ரிநாதரின் கோயில் மிகப் பெரியது அல்ல. மகாவிஷ்ணு இங்கு பத்மாசனத்தில் தவக்கோலத்தில் அமர்ந்து இருக்கிறார். கி. பி. எட்டாவது நூற்றாண்டில் இங்கு வந்த சங்கராச்சாரியார் இந்த விக்கிரஹத்தை இக் கோயிலில் பிரதிஷ்டை செய்து, பூஜைக் கிரமங்களை நியமித்ததாகத் தெரிகிறது. சங்கரருக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு இங்கு விஜயம் செய்த ராமானுஜாச்சாரியாரும் இக்கோயிலைத் திரும்பப் புதுப்பிகக ஏற்பாடுகள் செய்தார் எனத் தெரிகிறது.

பதினெண் புராணங்களையும் எழுதிய வியாச முனிவர், மகாபாரதக் கதையை பத்ரி க்ஷேத்திரத்தில் தான் எழுதினாராம். முதல் துதியிலே அவர் "நாராயணம் நரஞ்சைவ நரோத்தமம்", என்று துவக்குகிறார். அதாவது பத்ரியின் தெய்வங்களான நரனுக்கும், நாராயணனுக்கும் நமஸ்காரம் சொல்லி பாரதத்தை ஆரம்பிக்கிறார்.

ஸஹஸ்ரகவசன் என்ற ராக்ஷஸன் ஒருவன் தேவர்களையும், மக்களையும் மிகவும் துன்புறுத்தி வந்ததால் அவனைக் கொல்வதற்காகத் திருமால் வைகுந்தத்திலிருந்து பத்ரிக்கு வந்து நரன், நாராயணன் என்ற இருவராகமாறி ஆயிரமாண்டுகள் தவம் செய்ததாகவும், அதைக் கேட்டு அவர்களைக் கொல்ல வந்த ஆயிரம் கவசங்கள் பூண்ட அந்த அரக்கனை நர, நாராயணர்கள் யுத்தத்தில் கொன்று வீழ்த்தியதாகவும் புராணம். இன்றும் தாம் இயற்றிய அத்தவக் கோலத்திலே அங்கு கடவுள் காட்சி தருகின்றார். இந்த ஆனந்தக் காட்சியை ஒரு கணமேனும் கண்டு பக்திப் பரவசமாவதற்காக, பல்லாயிரக் கணக்கில் இன்றும் பக்தர்கள் வந்து குவிகின்றார்கள். உத்தரப் பிரதேசம் என்னும் ராஜ்யத்தில், டெஹ்ரி கர்வால் என்ற மாவட்டத்தில், பத்ரிகாச்ரமம் அமைந்துள்ளது.

பத்ரிநாராயண தரிசனம் செய்து கொண்ட யாத்ரிகன் இமயம் தந்த பேரின்பத்தை, வெள்ளிப்பனி மலை மீது உலவிய அனுபவத்தினால் பெற்று, பரமானந்தம் அடைந்து வீடு திரும்புகிறான். திரும்பி வந்து தன் பக்தி அநுபவங்களை தன்னைச் சேர்ந்தவருக்குச் சொல்லுகையில் திருமங்கை ஆழ்வார், பெரிய திருமொழியில், ஓர் பாசுரத்தில் சொன்னபடி:—

முதுகுபற்றிக் கைத்தவத்தால்
முன் ஒரு கோல் ஊன்றி
விதிர் விதிர்த்துக் கண் சுழன்று
மேல்கிளை கொண்டு இருமி
இதுஎன் அப்பர், மூத்த ஆறுஎன்று
இளையவர் ஏசாமுன்
மதுஉண் வண்டு பண்கள்பாடும்
பத்ரி வணங்குதுமே.

என்றபடி, நீங்களும் உடலில் வலுவுள்ள போதே இந்த அரிய யாத்திரையை முடித்துக் கொள்ள தவறாதீர்கள்.

முற்றும்.

"அதற்கேதான் அடிமையாவோம்"

[இரா. திருவெழிலன்]

★

1 காடழித்து நாடாக்கி ஊர்கள் கண்டே
கற்றோர்கள் புடைசூழ வாழ்வ தெல்லாம்
மாடாக உழைத்திட்ட உழைப்பால் அன்றோ?
மனிதர்கள் தொழில்செய்ய மறந்தி ருந்தால்
வீடுகளும் மாடிகளும் நிறைந்தே யுள்ள
வியனிலத்தின் கதியேதான் என்ன வாமோ?
ஈடில்லாத் தொழில்தந்த வாழ்வை நாமும்
எண்ணிட்டால் அதற்கேதான் அடிமை
யாவோம்.

2 ஏராலே சேருக்கித் தேர்ந்த நல்ல
எருவாலே செழிப்பாக்கிக் கதிர்கள் பெற்றே
பாரிதனில் உணவளிக்கும் தொழிலால் அன்றோ
பகுத்தறிவு மனிதரென வாழ்கின் றோம்நாம்?
வேரினிலே துஞ்சுகின்ற பலாவைப் போல
மீமிசையில் பெறுகின்ற இன்பம் எல்லாம்
யாராலே எனயெண்ணிப் பார்ப்பீ ராயின்
அறிந்திடுவீர் தொழிலாளர் தொழிலின்
பெற்றி.

3 களிமண்ணைப் பலவகையில் பிசைந் தெடுத்தே
கணக்காக அறுத்துடனே சூளை யிட்டே
அளிக்கின்ற தொழிலதனால் ஊர்கள் கண்டோம்
ஆங்காங்கே கிடக்கின்ற கற்கள் கண்டே
உளிகொண்டு உயிரெல்லாம் பொங்கி நிற்க
உருவமைக்கும் சிற்பியைப்போல் தொழிலே
உற்ற
உளியாக இப்புவியைப் படைப்ப தோர்ந்தே
உயர்ந்திடுவீர் தொழில்செய்தே உலகத் தீரே!

—[பி. வி. கிரி]—

15. சுய புராணம்!

"நடிகர் நாகப்பன் கொலையா? நாகப்பனுக்கு இக்கதியா வரவேண்டும்?"——நாடக உலகம் பேசிற்று.

"கொலை செய்தவன் யார்?"—துப்பறியும் மூவரின் கேள்வி.

"நயவஞ்சகப் பாம்பு தீக்கிரையானது!" — கணபதியாரின் எண்ணம்.

கணபதி முதலியாரும், வஸந்தாவும் காரில் விரைந்தனர் துப்பறிபவர் மாளிகைக்கு.

"வாருங்கள்! வாருங்கள்!..." புன்னகையுடன் வரவேற்றான் நாவேந்தன். அன்று குமாரி இந்திராவும் வந்திருந்தாள். அவள் கண்கள் நீர் வீழ்ச்சியாயின. நாகப்பனை நினைத்து நினைத்து அவள் ஏங்கிக்கொண்டிருந்தாள்.

"கபட எண்ணம் எண்ணுபவர்கள் எவருமே தனக்கு வரும் ஆபத்தை உணருவதில்லை. கபட எண்ணம யாரை வீழ்த்திற்று பார்த்தீர்களா? கொலை செய்யச்சொன்னவனையே கொலை செய்துவிட்டது! நல்லெண்ணம் படைத்தவர்களுக்கு நஞ்சும் அமிர்தமாகும்!" என்றான் நாவேந்தன்.

"நீங்கள் சொல்லுவது நூற்றுக்கு நூறு உண்மை!" என்றார் கணபதி முதலியார்.

தட்டில் டீயுடன் வந்த வேலப்பன், "ரங்கப்பன் வருகிறார்!" என்றான். ரங்கப்பன் ஒரு நாற்

காலியை இழுத்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

ரங்கப்பனிடம் ஒரு பழக்கம். தான் என்ன குற்றம் செய்தாலும் சரி, அது பிறருக்குத் தெரியாமலிருக்க, தன்மீது சந்தேகப்படும் நபர்களிடம் நெருங்கிப் பழகுவான். குற்றம் செய்து அவன் இதுவரை தலைமறைவாகச் சென்றதில்லை. இன்றுவரையும் அவன் அப்படித்தான் நடந்து வந்தான். ஆனால்......?

"என்ன மிஸ்டர் ரங்கப்பன்! ஆள் இங்கே ஏன் தலைகாட்டுவதே கிடையாது!" என்றான் நாவேந்தன்.

"ஊருக்குப்போயிருந்தேன்! உடம்பு சரியில்லை!"

"எந்த ஊருக்கு?" கைலாஸ் கேட்டான்.

"குண்டூருக்கு!"

"குண்டுவிடாதே தம்பி! உண்மையைச் சொல்லு!"

"நான் பொய்யே பேசியதில்லை!"

"நீர் அரிச்சந்திரன் பரம்பரைதான்! இப்படி வாருங்கள், நாம் தனியே பேசுவோம்!" என்று கூறி கைலாஸ் ரங்கப்பனை அழைத்துச் சென்றான். அவனுடன் குருநாதனும் சென்றான்.

ஒரு நீண்ட அறை. ஜன்னல்கள் கண்ணாடியால் மூடப்பட்டிருந்தது. உள்ளே கத்தும் சத்தம் வெளியே கேட்காது. அறையினுள் மின்சாரம் சம்பந்தப்பட்ட பொருள்கள் காட்சி தந்தன. ரங்கப்பனை இருவரும் அழைத்துச்சென்றனர். ரங்கப்பன் அறையினுள் ஒரு பக்கம் நின்றிருந்தான். அறையின் ரகசியம் அவனுக்கெங்கே தெரியப்போகிறது?

அவன் நின்றிருந்த இடம் சிறிது அதிர்ந்தது. அவ்வளவுதான் ரங்கப்பன் உயரே சென்றான்! மேலே பொருத்தப்பட்டிருந்த இரும்பு சட்டங்கள் அவன் கழுத்தை பிடித்துக்கொண்டன! இரு கொக்கிகள் அவன் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டது! தரையோடு தரையாக இருந்த இரும்புப்பலகை அவனைத்தாங்கிக்கொண்டிருந்தது.

"ரங்கப்பன் சரியான இடத்தில் மாட்டிக்கொண்டான். இனி அவன் தப்பமுடியாது! அம்பலமாகப் போகிறது இனி விஷயங்கள்!" என்று குருநாதனிடம் கூறிவிட்டு, ரங்கப்பனைநோக்கி, "நீ செய்த அக்கிரமங்களைக் கூறிவிடு! இல்லையேல் நீ சித்ரவதைக்கு ஆளாவாய்!" என்று கர்ஜித்தான் கைலாஸ். உடனே குருநாதன் கீழே பேசிக் கொண்டிருந்த அனைவரையும் அழைத்து வந்தான். அனைவரும் ரங்கப்பனையே பார்த்தனர். நாவேந்தன் ஆச்சரியத்தால் கைலாசைப் பார்த்தான்.

"உம்...ஆகட்டும்!...கர்ஜித்தான் கைலாஸ். ரங்கப்பனின் இடப்பக்கமும் வலப்பக்கமும் இரு ஈட்டி முனைகள் மெல்ல மெல்ல வந்தன. ரங்கப்பன் சொல்ல ஆரம்பித்தான்:

"என் பெயர் குட்டி நாயர்! குள்ளன் என்று என்னைக் கூப்பிடுவர்! ஆனால் நான் வைத்துக் கொண்ட பெயர் ரங்கப்பன்! எனக்கு ஒரு தங்கை இருந்தாள். ஏன்? இப்பொழுதும் இருக்கிறாள். அவள்தான் குமாரி இந்திரா! நடனத் தொழில் வேண்டாம் என்று நான் கூறியும், அவள் என்னை உதறித் தள்ளிவிட்டு மோசக்காரனான நாகப்பனிடம் சேர்ந்து கொண்டாள். நடிகர் நாகப்பனுக்கும் எனக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் மூண்டதுண்டு. அதனால் அவனைத் தீர்த்துக்கட்ட வஞ்சம் கொண்டேன். என் பழி தீர்ந்தது. ஆம், நாகப்பனும் இறந்தான். அவனைக் கொலை செய்தவனும் நானேதான்!

பணத்தாசையின் காரணமாக மிராசுதார் முனுசாமி நாயக்கரின் வேண்டுகோளின்படி மினர்வா கொட்டகையின் மானேஜரான அருள்சாமி நாயக்கரைக் கொலை செய்தவனும் நான்தான்!

கணபதி முதலியாரைக் கொலை செய்தால், ஏராளமான பணம் தருவதாக சாத்தப்பனிடம் நாகப்பன் கூறினான். ஆசையால் சாத்தப்பனுடன் அன்று இரவு கணபதி விலாசுக்கு வந்து தப்பிச்சென்றவனும் நானேதான்!

நீங்கள் என்னென்ன கேள்விகள் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும்! இடையிடையே நீங்கள் கேட்கத் தேவையில்லை என எண்ணுகிறேன்! நடிகர் நாகப்பனும், கள்வர் தலைவனும் சிறுவயது முதற்கொண்டே இணைபிரியா நண்பர்கள். அத

ஞல் அவன் அடிக்கடி டண உதவியும் செய்து வந்தான். அவனது வீட்டில் கள்வர் தலைவனது ஆயுதங்கள் சில இருக்கலாம். அவைகளில் திரு. கரு. சங். என்று பொறிக்கப்பட்டிருக்கும். அதனுடைய முழுப்பெயர் 'திருவாங்கூர்' கருப்பன் நாயர் மகன் சங்குண்ணி நாயர்' என்பது. பேய்மாடன் என்று எங்கள் தலைவரே வைத்துக்கொண்டார். அவருடைய சொந்தப் பெயர் சங்குண்ணி நாயர்!

துண்டுக் கடிதங்கள் பல என்னுல் எழுதப்பட்டவையே!

மிராசுதார் வீட்டில் கொள்ளையடித்தவனும் நானேதான்! என்னுடன் வந்தவன் சாத்தப்பன்! இந்திராவின் நடனம் நடக்கக் கூடாதென்று எண்ணி நாடகக் கொட்டகைக்குத் தீ வைத்தவனும் நானே!

வேலப்பனைத் தூக்கிச் சென்றவனும் நானேதான்!

ரங்கப்பன் பேய் போலச்சிரித்து, "பணம்! பணம்!! பணம் இப்படிப்பட்ட தீச்செயலையெல்லாம் செய்யும்" என்று நான் எண்ணவேயில்லை. இத்தகைய இழி தொழிலைக் கைக்கொண்டது என் விதியா? இல்லை! இல்லை! மதிகெட்டுப்போனேன்! மிருகமானேன்! மிருகத்தன்மையினின்று நீங்க வழியில்லையா? இருக்கிறது. அதனுல் தான் நானே சரணடைந்தேன், இறுதியிலே சிறையிலாவது அமைதியாகச் சாகலாம் என்ற எண்ணத்துடன்!

முப்பதே வயது மதிக்கத் தகுந்த சங்குண்ணி நாயர் எழுபது வயது மதிக்கத் தகுந்த கிழவன் போல வேஷம் போட்டிருக்கிருன்! பிளாஸ்டிக் பொருளால் ஆன கை விரல்கள், முகங்கள், வெண்தாடி இவைகளுடனே அவன் தினமும் காட்சியளிக்கிருன். அவனைக் கைது செய்வதென்பது முடியாத காரியம். ஆனுலும் அவனைக் கைதுசெய்ய இரவு நேரம்தான் சரியானது. அன்னியர்கள் எவரேனும் அப்பக்கம் வந்தால் ஒருவிதப் புகையைக் கிளப்பி திணற அடிக்கின்றனர். அவ்விதப் புகையைக் கிளப்பும் ஆசாமிகள் குகையின் முன் இருக்கும் இருவர்தான். அவ்விருவர்களையும் எப்படியேனும் தூக்கிச் சென்று விட வேண்டும். பிறகு வெளியில் இருக்கும் மணியை அடித்தால் பாறைக் கதவு திறக்கும். ஒரு முறை குருநாதன் அவர்களும் குகைக்கு வந்திருப்பதாகக் கேள்வி! உள்ளே இருக்கும் பாதாளக் கிணற்றுள் இறங்க வேண்டும். இறங்கி இடது பக்கம் திரும்பியதும் வழி இருக்காது. ஏனெனில் அங்கு சுவர் தடையாயிருக்கும். அதற்காக அங்கு இருக்கும் சிகப்பு பட்டனை அழுத்திஞல் சுவர் இரண்டாக பிளவு படும். உள்ளே சென்றதும், எங்கும் நீர் மயமாக இருக்கும். கரையில் ஒரு படகு தயாராக கட்டப்பட்டிருக்கும். அதில் ஏறி மறு கரையை அடைந்து, அங்கு தொங்கிக் கொண்டிருக்கும் மணியை மும்முறை ஒலிக்க வேண்டும். பெருத்த சத்தத்துடன் இரண்டு பாறைக்கதவுகள் திறக்கும். அதனுள்ளே

P. H. முகமது நஸீருத்தீன்

★

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G. I. பைப் & பைப் பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

★

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

★

குறிப்பு:—

1/157, தஞ்சை ரோடு (அரிய மங்கலம் ஹமீதியா ரைஸ் மில் எதிரில்) சப் டிப்போவிலும் சிமெண்ட் டிலவரி செய்கிறோம்.

தான் சங்குண்ணி நாயர் தூங்கிக் கொண்டிருப்பார்!''

இவைகளைக் கேட்ட அனைவரும் ஆச்சரியத்தால் ரங்கப்பனைப் பார்த்தனர். ரங்கப்பன் மேலும் கூறினான்:

''என்னுடைய ஆருயிர் நண்பர்களாக இருந்ததால் தான் இவைகளைக் கூறினேன்! இல்லையேல் இவைகளை வெளியிட்டிருக்கமாட்டேன்! என் தலைவன் கூட நினைக்கலாம், ''நம் குழுவிலேயே இருந்து நம்மையே காட்டிக்கொடுத்து விட்டான் மோசக்காரன்!'' என்று. இப்படிப் பட்டவர்களை ஒழித்தால்தான் நாடு உருப்படும்! அதை இன்று தான் உணர்ந்தேன்,

கடைசியாக என் மனதில் ஒரு ஆசை எழுகிறது. அதையும் ஒளிக்காமல் கூறிவிடுகிறேன். ''என் தங்கை இந்திராவை கைலாசே மணந்து கொள்ளட்டும்! அனாதையாக நிற்கும் அவளை அவர் ஏற்றுக்கொண்டு ஆதரவு அளிக்கட்டும். இதுவே என் வேண்டுகோள். இனியாவது இந்த இரும்புச் சட்டம் என் கழுத்தை விட்டுவிடும் என்று நினைக்கிறேன்!'' என்றான்.

அங்கு இருந்த எல்லோர் கண்களிலுமே ஒரு சொட்டு நீர் வரத்தான் செய்தது ரங்கப்பனின் நிலைமையைக் கண்டு.

''இவ்வளவு குற்றங்களையும் செய்துவிட்டு ஒளிக்காமல் உரைத்த ரங்கப்பன் ஒரு விசித்திரக் குற்றவாளியே!'' என்று எண்ணினர் பலர். அவனைப் பிடித்திருந்த

இரும்பு சட்டங்கள் பிடியைத் தளர்த்தின. ரங்கப்பன் முன் போல தரையில் நின்ருன். அவ ன் கைகளில் விலங்குமாட்டப் பட்டது.

"விலங்கு'க்கு விலங்கு!" என்று சிரித்தான் குற்றவாளி.

ரங்கப்பனிடமிருந்து வெளி வந்த வாக்கு மூலங்கள் குருநா தனின் நோட்டுப்புத்தகத்தில் இடம் பெற்றன.

ரௌடி ரங்கப்பனும், கேடி சாத்தப்பனும் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்.

ரங்கப்பனைத் தேடிக் கொண் டிருந்த பம்பாய் போலீஸாரும் தேடுவதை நிறுத்தினர். ஏனெனில் ரங்கப்பன் தான் மாட் டிக் கொண்டானே!

* * *

ஒருநாள் இரவு மலைக்குகை யை நோக்கி, துப்பறியும் மூவர், இன்ஸ்பெக்டர் சதாசிவம், சாஸ் திரியார் ஆகியவர்கள் துணைக்கு சில போலீஸ் புலிகளை அழைத் துக் கொண்டு சென்றனர்.

சவுக்குத் தோப்புக்கும் மலைக் குகைக்கும் அரைபர்லாங் தூரம் இருக்கும். குருநாதன் மற்றவர் களை சவுக்குத் தோப்பில் இருக் கச் செய்துவிட்டு தான் மட்டும் குகையை நோக்கிச் சென்ருன்.

குகைக்கு வெளியே இருந்த இருவர் குருநாதனை உற்று நோக்கி, "ஓ! அன்னிக்கு வந்த வரு இவுரு!" என்ருன் ஒருவன்.

"ஆமாம். பாத்தாப்போலெ கீது!" என்ருன் மற்றவன்.

"அந்த சவுக்குத் தோப்பில் சில வழிப் போக்கர்கள் தங்கள் பொருள்களைப் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர். என் கையி லிருந்த இருபது ரூபாயையும், கைக் கடியாரத்தையும் பிடுங்கிக் கொண்டார்கள்! இன்னும் அங்கு தான் இருக்கிருர்கள்!" என்ருன் குருநாதன்.

"அப்படியா?"

"ஆமாம் வாருங்களேன்!"

இருவரையும் அழைத்துக் கொண்டு சவுக்குத் தோப்பிற் குள் சென்ருன். தயாராக இரு ந்த இன்ஸ்பெக்டர் இருவரையும் கைது செய்து ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ருர்.

குருநாதன் அனைவரையும் அழைத்துக் கொண்டு குகை வாசல் முன் நின்ருன். அங்கு தொங்கிக் கொண்டிருந்த மணி யை ஓங்கி அடித்தான். பாறையா லான கதவு பேரிரைச்சலுடன் திறந்தது. அனைவரும் உள்ளே நுழைந்தனர். பொக்கிஷ அறை யின் பக்கம் இருள்தான் சூழ்ந் திருந்தது. வழி தெரியாமல் தவித்தனர். ஒவ்வொருவர் மனதிலும் பீதி குடி கொண்டது. குருநாதன் முன் செல்ல அவனைப் பின்பற்றி அனைவரும் சென்ற னர்.

மலைக்குகைக் கள்வர்கள் எவரு மே அங்கு இல்லை! பின் எங்கு என்று கேட்கிறீர்களா? அந்த இடம் இரு பிளவாகப் பிரிக்கப் டிருந்தது. பொக்கிஷ அறையி

லிருந்து ஒரு பர்லாங் தூரம் ஒரு பகுதி இருந்தது. அங்குதான் கள்வர்களின் இருப்பிடம் எல்லாம்.

அவர்கள் பாதாளக் கிணற்றுக்குள் இறங்கினர். இடது பக்கம் சென்று பட்டனை அழுத்தினுன். சுவர் பிளந்தது. ஒரு பெரிய குளம். படகில் ஏறி அக்கரையை அடைந்தனர். மணி மும்முறை ஒலித்தது. பாறைக் கதவுகள் திறந்தன. அனைவரும் உள்ளே சென்றனர்.

சங்குண்ணி நாயர் ஆனந்தமாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர் கட்டிலை மெல்ல நெருங்கிய குருநாதன் கருப்புத்துணியால் சங்குண்ணி நாயரின் முகத்தை மூடி சட்டென கைகளுக்கு விலங்கிட்டான்.

திமிறிக்கொண்டு எழுந்த மலைக்குகைக்கள்வன் சங்குண்ணி நாயர் எதையும் பார்க்கமுடியாமல் தவித்தான். பேசமுடியாமல் திணறினுன். அவன் வாயில் துணி அடைக்கப்பட்டது. இனி அவனை வெளியேகொண்டு வருவதுதான் எமகண்டம்!

சங்குண்ணி நாயரைத் தூக்கிக்கொண்டு கரையை அடைந்தனர். பிறகு கிணற்றுக்கு மேலே வந்தனர். அவனை வெளியே தூக்கிக்கொண்டு வரும் வரையிலும் அவர்களுக்குப்போதும், போதும் என்ருகிவிட்டது. அப்பாடா! குகைக்கு வெளியே வந்தனர். மயக்க முற்றிருந்தான் சங்குண்ணி நயர்.

சவுக்குத் தோப்பில் முதலில் சென்ற ஜீப்கார் இருவரையும் ரிமாண்டில் தள்ளிவிட்டு தயாராக வந்து நின்றது.

சங்குண்ணி நாயர் ஜீப்காரின் மூலமாக ஸ்டேஷனை அடைந்தான்.

பலவருஷங்கள் ஆராய்ச்சியின் பயனுக (துப்பறியும் மூவர்களால்) செய்யப்பட்ட வெடி குண்டு மலைக்குகையை சுக்கு நூருக்கியது, அதிலுள்ள பொருள்கள் கைப்பற்றபட்டபின்.

அன்று கோர்ட்டுக்கு பொது மக்கள் விழுந்தடித்துக்கொண்டு சென்றனர். நானும் அதில் ஒருவன்!

கொலைக்கும், கொள்ளைக்கும் அஞ்சாத மலைக்குகைக் கள்வன் பேய்மாடன் என்னும் சங்குண்ணி நாயருக்கு ஆயுள் தண்டனை!

"பல கொலைகளையும், கொள்ளைகளையும் ஒரு கை பார்த்த ரங்கப்பனுக்கும் ஆயுள் தண்டனை!"

"கைம்மாறு கருதி உதவி புரிந்த சாத்தப்பனுக்கு 10 வருட சிறைத் தண்டனை!"

"மானேஜர் அருள்சாமியின் கொலைக்குக் காரணமாயிருந்த மிராசுதார் முனுசாமி நாயக்கருக்கு மூன்று வருட கடுங்காவல்!"

பொதுஜனங்கள் மிக்க மகிழ்வெய்தினராய் துப்பறியும் மூவர்களையும், உதவியாக இருந்தவர்

போன் : 31738 தந்தி : மெரிகோல்ட்

தொழில்

(INDUSTRY)

(தமிழ் மாத மிருமுறை)

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

விளம்பர விகிதம்

1-11-1959 முதல் மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

கடைசி மேல் அட்டை 2 கலர்	...	ரூ.	150	0	0
,, 1 கலர்	...		120	0	0
மேல் அட்டை உள்பக்கம் 2 கலர்	...		125	0	0
,, 1 கலர்	...		100	0	0
உள் முழு பக்கம் (ஒரு தடவை)	...		75	0	0
,, ½ பக்கம் ,,	...		40	0	0
,, ¼ பக்கம் ,,	...		20	0	0

குறிப்பு:—ஆறு மாதத்துக்கு மேல் காண்ட்ராக்ட் விளம்பரம் தருபவர்களுக்கு கட்டணச் சலுகைகள் உண்டு.

களையும் பாராட்டினார்கள். ஏன்? கணபதி விலாசில் அன்று பாராட்டு விழாவே நடந்தது. குமாரி இந்திராவின் நடனத்துடன் விழா ஆரம்பமாகியது. விழாவிற்கு நாவேந்தனின் மனைவி, குருநாதனின் மனைவி இன்னும் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். பல பரிசுகள் கிடைத்தன. அப்பரிசுகளை விட குமாரி இந்திராவை மனைவியாக அடைந்ததே பெரிய பரிசு என்று எண்ணினான் கைலாஸ்!

"வாழ்க துப்பறியும் நிபுணர் கள்!"

என்ற கோஷம் வானைப் பிளந்தது. அது உங்களுக்குக் கேட்கவில்லையா?

முற்றிற்று.

எண்ணெ ஊற்றுத் தொழிலின் தந்தை

பெஞ்சமின் ஸிலிமன் ஜூனியர் ஐக்கிய அமெரிக்காவின் யேல் பல்கலைக் கழகத்தின் இரசாயன பேராசிரியர். இவர்தான் எண்ணெய்யூற்றுத் தொழிலுக்கு (பெட்ரோலியம்) காரணமானவர்.

'816ல் நியூஹாவன்ஸில் ஸிலிமன் பிறந்தார். தன் தந்தை ஆராய்ச்சி நிலையத்தில் செய்யும் பரிசோதனைகளை கூர்ந்து கவனிப்பதையே தன் பொழுது போக்காகக் கொண்டார்.

ஸிலிமன் 1837ல் 21 வது வயதில் யேல் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பட்டம்பெற்று, உயர்நிலைப் பள்ளியிலே விஞ்ஞான ஆசிரியராக பணியாற்றினர். குறுகிய காலத்திற்குள் பேராசிரியராக திகழலானர்.

அவர் சூசன் போர்பிஸ் என்பவரை காதலித்து 1840 ல் மணந்து கொண்டார். அப்போது ஸிலிமனுடன் நிறைந்த தம்பத்திய வாழ்க்கை நடத்தி வந்தாள், அவள் அவர் ஆராய்ச்சிகள் செய்ய உறுதுணையாயிருந்தாள்.

1854 ல் ஜார்ஜ் பிஸ்ஸில் ஜோனாதன் எவிலித் ஆகியோர் நீலம் கலந்த பச்சையான ஒரு பொருளைக் கொடுத்து அதனால் பயன் ஏதாவது ஏற்படுமா என்று சோதனை செய்து பார்க்க வேண்டினர்,

பென்ஸில்வேனியாவிலுள்ள இந்தியர்கள் பூமியிலிருந்து கசிந்து நீரோடையில் மிதக்கும் எண்ணெயை எடுத்து மருந்தாக உபயோகித்து வந்தனர்,

பெட்ரோலியத்தைப்பற்றி அறிய யேல் நூல் நிலையத்திலுள்ள விஞ்ஞான புத்தகங்களை ஆராய்ந்தும் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. பெட்ரோலியத்தால் பயன் உண்டா என்பதை அவரால் அறிந்து கொள்ள இயலாததால் 1854-ல் தானே சோதனையில் இறங்கினர்.

அக்காலத்தில் கிடைக்கக் கூடிய சொற்ப கருவிகளைக் கொண்டு பெட்ரோலியத்தைப் பிரித்து அறிய முடியவில்லை. தன் சொந்த முயற்சியிலே ஒரு புது கருவியை கண்டுபிடித்தார்.

1854-55 ம் ஆண்டு சோதனைகள் செய்து பார்ப்பதிலே கழிந்தது, முதலில் மருத்துவத்திற்கு உதவக் கூடுமோ என்று ஆராய்ந்தார். அவரால் ஒன்றும் அறியவில்லை. மருத்துவத்திற்கு உபயோகமற்றது என்ற முடிவுக்கு வந்தார்.

1856 ல் ஆரம்பத்தில் தன் சோதனைகளின் முடிவை வெளியிட்டார். பெட்ரோலியத்திலிருந்து, மண்ணெண்ணெய், லூபிரிகேடிங் ஆயில், மெழுகு, காஸோலின் (Gasoline) போன்ற பொருள்களும் கிடைக்கப் பெற்ருர்.

ஸிலிமனின் சோதனைகள் எண்ணைக்கு சிறந்த வருங்காலத்தை ஏற்படுத்திற்று. 1859 ல் எட்வின் எல். டிரேக் என்பவர் உதவியால் முதல் எண்ணெய் ஊற்றுக் கிணறு தோண்டப்பட்டது.

ஆரம்பத்திலே உபயோகமற்ற பொருளாக கருதப்பட்ட காஸோலின், என்ஜின்கள் கண்டுபிடிக்கப் பட்டபோது கரிக்கு பதிலாக எரி பொருளாக ஆகியது. ஆகவே, காஸோலின் உற்பத்திக்காக அநேக பெரும் சுத்திகரிப்பு நிலையங்கள் தோன்றின.



தற்காலத்தில் பெட்ரோலியத்தின் உபபொருள்கள் உற்பத்தியும், உபயோகமும், உலகின் மிகச் சிறந்த வியாபாரங்களில் ஒன்றும். அமெரிக்காவில் மட்டுமே இதில் பாதி உற்பத்தி செய்யப்படுகிறது.



மனிதன் கண்டெடுத்த பொருள்களில் மிகவும் முக்கியமான, உபயோகம் நிறைந்த பொருள் பெட்ரோலியம். இவ் வெண்ணெய் இல்லையெனில் எந்த இயந்திரமும் இயங்க முடியாது. பூச்சிகளைக்கொல்லும்கிருமிநாஸினியின் உபயோகமும் தெரிந்திராது.



1885ல் ஸிலிமன் விண்ணுலகெய்தினார். அவர் கண்டுபிடித்த மூலாதாரவழிகள், சோதனைகள் இன்னும் உபயோகத்தில் இருந்து வருகின்றன.

ஸிலிமன் தான் கண்டவைகளை தனக்கென வைத்துக் கொள்ளாமல் எல்லோரும் பயன் அடையச் செய்தார்.

குடு குடுப்பாண்டி

★

வானம் வெளுக்கா வேளையிலே
வையந் துயிலும் வேளையிலே
மோனத் திரையைக் கிழித்தங்கே
கானம் பாடி வருகின்ருன்!

'குடுகுடு வோசை ஊரதிர
குரைக்கும் நாய்களும் பின்தொடர
'விடு விடு' வெனவே நடைபோட்டு
வீடுகள் நாடி வருகின்ருன்!

நல்லதை நாடும் உளம்துள்ள
நலம்பல கூற நாவெழுப்பி
இல்தொறும் நின்று இசைபாடி
இருட்டை விழுங்கி வருகின்ருன்!

சலித்திடும் நெஞ்சைச் சார்ந்திடும்பாழ்
சங்கடம் கவலை துயரெல்லாம்
ஒலித்திடும் பகவதி பெயரருளால்
ஓடக் கூவி வருகின்ருன்!

வீடும் நாடும் எங்கணுமே
விளங்குக நலம்பல எனவாழ்த்திப்
பாடும் பாட்டால் நற்கால
பலனைச் சொல்ல வருகின்ருன்!

நல்லதைச் சொல்லி நலிவோட்ட
நாடுவதேவெறுங் கந்தல்தான்
நல்லவர் வாழத் தான்வாழும்
நம்பிக் கையுடன் வருகின்ருன்!

— எஸ். யோகம்.

5

Estd. 1930 Phone No. 4470

மணத்தில் உயர்ந்தது! குணத்தில் சிறந்தது!!

எங்கும் புகழ் பெற்ற

கவர்னர் ஜாடி பீடியை

எப்பொழுதும் உபயோகியுங்கள்

எங்கும் கிடைக்கும்

உரிமையாளர் :

அப்துல் ஜப்பார்

கவர்னர் ஜாடி பீடி பாக்டரி

மதருஸ் - 12.

★

என்றும் இனிமை தருவதும்,

உற்சாகத்தை உண்டாக்குவதும்

கவனர் ஜாடி பீடியே!

ஆளிலாப் பொறிமுறையும் அதன் விளைவுகளும்

—மார்ஜோரி ஏ. யாரேஸ்—

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தொழிற்புரட்சி ஏற்பட்டது; பொருளாதாரத் துறையிலும் சமூகத் துறையிலும் பெருத்த மாறுதல்கள் தோன்றின. இன்று மனிதன் இல்லாமல் இயந்திரமே இயந்திரங்களை இயக்கும் புது முறை ஆட்டோமேஷன் தோன்றியிருக்கிறது. இதனாலும் பெருத்த மாறுதல்கள் நிகழும். புதுமுறை உருவாகிப் பத்தாண்டுகளாகின்றன.

தொழிற்சாலைகளில் தொழிலாளி இன்று இயந்திரத்தை முடுக்கி விடுகிறான்; அது ஒழுங்காக வேலை செய்கிறதா என்று பார்க்கிறான்; அதனுள் போடவேண்டியதைப் போடுகிறான்; அதிலிருந்து எடுக்கவேண்டியதை எடுக்கிறான். இந்நான்கு வேலைகளையும் இனி இயந்திரங்களே செய்து விடும்; அவன் தேவையில்லை. மாறும் நிலைமைக்குத் தக்கவாறு மாறவும், தவறுகள் நேர்ந்தால் திருத்தவும், உற்பத்திப் பண்டங்களைச் சரிபார்க்கவும், தேய்ந்த பாகங்களை மாற்றவும் புது முறை இயந்திர இயக்கமே போதும்; அந்தந்த இயந்திரத்தின் அண்டை ஆள் இருந்து வேலை செய்ய வேண்டிய தேவை இல்லை.

அமெரிக்காவில், ஆள் இருந்து வேலை செய்யும் இயந்திர முறையை எடுத்துவிட்டு, ஆளிலாப் பொறி முறையை (ஆட்டோமேஷன் முறையை)ப் பெரிதும் கைக்கொண்டு நெடு நாளாக நடக்கும் தொழில்களில் ஒன்று பெட்ரோல் தொழிலாகும். நாள் ஒன்றுக்கு நாலு லட்சம் ஹெக்டோலிட்டர் எண்ணெய் சுத்தமாகும் ஒரு பெரிய தொழிற்சாலையில் 20 மாடிக் கட்டட உயரத்துக்கு எஃகுக் கோபுரங்களும், நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் நீளத்துக்குக் குழாய்களும் தோன்றும்; இவ்வளவையும் மேற்பார்த்து வேலை செய்யும் தொழிலாளிகளோ ஐந்தே ஐந்து பேர்களே இருப்பர். தொழிற்சாலையின் ஒரு மூலையில் சுத்தமற்ற எண்ணெய் சொரியப்படுகிறது; ஆளிலாப் பொறி முறையின் மூலம் அது செல்லவேண்டிய இடங்களுக்கெல்லாம் சென்று சுத்தமாகி, வேலைதீர்

ந்து பற்பல வகைப்பொருள் களாக வெளி வருகிறது.

மோட்டார்கார் உற்பத்தியில்...

மோட்டார்கார் உற்பத்தியிலும் ஒரு வகை ஆளிலாப் பொறி முறை கையாளப்படுகிறது. போர்டு மோட்டார்க் கம்பெனிக்குக் கிளீவ்லாந்து என்னுமிடத்திலுள்ள தொழிற்சாலையில் 1952 முதல் இவ்வகை முறை நடைபெறுகிறது. மோட்டார் இயந்திரங்களை உருவாக்குவதற்குத் துளையிடல், அராவுதல், தேய்த்தல், தட்டுதல் முதலிய 530 வேலைகளை 14.6 நிமிஷ நேரத்தில் செய்து முடிப்பதற்கு இவ்வகை ஆளிலாப் பொறி முறை அங்கு உதவுகிறது.

எல்லா இடங்களையும் விட அலுவலகங்களில் ஆளிலாப் பொறி முறை அதிக முன்னேற்றம் அடைந்துள்ளது. அமெரிக்கக் கம்பெனிகளில் மொத்தம் 1,240 கணக்குக் கருவிகள் உள்ளன; இன்னும் 3,000 கருவிகளுக்குக் கோரிக்கை வந்திருக்கிறது. இத்தகைய கருவிகளில் ஒன்று "இன்டர்நேஷனல் பிஸினஸ் மெஷீன்ஸ் கார்ப்பரேஷன்" தயாரிப்பான "மாடல் 705" என்பது. பயிற்சியுள்ள, 25,000 கணித ஆசிரியர்கள் செய்யக்கூடிய கணக்குகளை இந்தக் கருவியின் துணையால் ஒரே ஒருவனே செய்துவிடுவான். 127 இலக்கங்கள் உள்ள இரண்டு எண்களின் பெருக்கத்தை இக் கருவியால் ஒரு விநாடியில் மூன்றில் ஒரு பங்கு நேரத்தில் கண்டு பிடித்துவிடலாம். சிக்கலான கணக்குகளையெல்லாம் இக் கருவி இவ்வாறு ஒரு நொடியில் தீர்த்து விடும்; விடைகளை ஒரு வரிக்கு 120 எழுத்துக்கள் கொண்டதாக நிமிஷத்துக்கு 1,000 வரிகள் வீதம் அச்சடித்துத் தந்துவிடும்.

பெல் டெலிபோன் கம்பெனியில் இவ்வகை ஆளிலாப் பொறி முறைபயன்படுகிறது. நெடுந்தொலைவிலுள்ள நகரம் ஒன்றில் ஒருவருக்குப் "போன்" பேச வேண்டுமானாலும் இடையில் டெலிபோன் பணியாள் உதவியின்றி நேரடியாகப் பேசக் கூடிய வசதி இப்புது முறையின் பயனேயாகும்.

ஆதாரமற்ற அச்சம்

எல்லா வேலைகளுக்கும் ஆளிலாப் பொறி முறை வந்து விடுமோ என்ற அச்சம் வேண்டாம். கட்டுமான வேலையில் தச்சுத் தொழில், மின்விசை வசதிசெய்தல், குழாய் அமைத்தல், கரை அமைத்தல், வர்ணம் தீட்டுதல் இவற்றுக்கெல்லாம் ஆள் இல்லாமல் தீராது. சில்லறை வியாபாரத்திலும், மக்கள் பொருள்களைக் கண்ணால்

உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மகாலைப் பார்க்க
விரும்பாதவரும் தாஜ்மகால் புகையிலையை
உபயோகிக்காதவரு முண்டோ இந்த மாநிலத்தில்!

காரம், மணம், குணம் ஒருங்கே அமைந்தது
தாஜ்மகால் புகையிலையே!

சுறுசுறுப்பும், புத்துணர்ச்சியும் கொடுக்க வல்லது
தாஜ்மகால் புகையிலை ஒன்றேதான்.

எல்லோரும் வாங்கி உபயோகித்துப்
பேரானந்தம் அடையுங்கள்!

புகையிலையில் சிறந்தது தாஜ்மகால் புகையிலை!

உரிமையாளர் :

மீ. ந. அ. முகம்மது சுல்தான் & சன்ஸ்

புதுக்கோட்டை.

பார்த்து, விற்பனையாளர்களை நேரில் கண்டு பேசித்தான் வாங்குவார்கள். கார் ஓட்டவும், பஸ் ஓட்டவும் ஆள் வேண்டும். கார், ரயில்வண்டி, விமானம் இவற்றைப் பழுது பார்க்கும் பணிகளும் ஆளில்லாமல் நடவா. முடிவெட்டவும், தோட்டம் போடவும், உணவு விடுதிகளைக் கவனிக்கவும் ஆள் இன்றி முடியாது.

ஆளிலாப் பொறி முறையைப் பயன்படுத்தக் கூடிய பலதொழில்களிலும் அதை மெல்ல மெல்லவே கைக்கொள்ள முடியும். ஏனெனில், அதற்குத் தக்கபடி இயந்திரங்களில் பல மாறுதல்கள் செய்யவேண்டியுள்ளன. ஆயிரக்கணக்கான கருவிகளை மாற்றவேண்டியுள்ளது.

நாளடைவில் அமெரிக்காவின் உற்பத்தித் தொழில்களில் உள்ள வேலை முறைகளில் நூற்றுக்கு 16 பங்கு ஆளிலாப் பொறி முறை மூலம் இயங்கும் எனக்கணக்கிட்டுள்ளனர்.

இளம் பிள்ளை வாதத் தடுப்பு: ஆபத்தில்லாத சால்க் மருந்து

இளம்பிள்ளை வாதம் கடுமையான நோய். மக்கள் அதற்கு அஞ்சினார்கள். அது மூடமாக்கும் பிணி. அதனைத் தீர்க்க முயற்சிகள் நடந்த வண்ணமாக இருந்தன. இன்றைக்கு ஐந்தாண்டுகளுக்கு முன் ஏப்ரல் 12ம் தேதி சால்க் மருந்தை இளம்பிள்ளை வாதத்துக்குப் பயன்படுத்தலாம் என்று விஞ்ஞானிகள் ஒப்புக் கொண்டார்கள். சால்க் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது மருத்துவக் கலையில் ஒரு முக்கியமான முன்னேற்றமாகும். இளம்பிள்ளை வாதம் பற்றிய அச்சத்தை இது ஒருவாறு போக்கியது.

டாக்டர் சால்க், கண்டுபிடித்த ஊசி மருந்து இது. எனவே, சால்க் மருந்து என அழைக்கப்படுகிறது. அவர் 1949ல் இளம்பிள்ளை வாதம் பற்றிய தமது ஆராய்ச்சியைத் தொடங்கினார். இளம்பிள்ளை வாதம் இந்திய தேசீய ஸ்தாபனம் வழங்கிய நிதி உதவியால் அவர் ஆராய்ச்சி நடத்தினார். அப்போது அவர் பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தின் மருத்துவக் கல்லூரி ஆசிரியராகவும், பல்கலைக் கழகத்தின் 'வைரஸ்' ஆராய்ச்சிக் கூடத் தலைவராகவும் இருந்தார்.

முதலில் அவர் இளம்பிள்ளை வாத வைரஸின் வகை இன்னது என்றுதான் முயன்றார்; அதன் பின் இளம்பிள்ளை வாத ஊசி மருந்து செய்தார்.

தடுப்பு மருந்து செய்யும் போது, அவர் பல்லாண்டுகளாக விஞ்ஞானிகள் பலர் ஆராய்ந்து கண்டு பிடித்தவற்றை யெல்லாம் பயன்படுத்தினார்.

தடுப்பு மருந்தைப் பயன்படுத்தும் சோதனைகள் தொடங்கலாம் என்றும், மனிதர்களுக்கும் அதைக் கொடுத்துப் பார்க்கலாம் என்றும் அவர் 1950ம் ஆண்டில் இளம்பிள்ளை வாதம் பற்றிய தேசீய ஸ்தாபனத்துக்கு எழுதினார்.

தீர்க்கமான சோதனைகள்

டாக்டர் சால்க் மிருகங்களைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான சோதனைக்ள் நடத்தினார். மனிதர்கள் 9000 பேருக்கும், கொடுத்துச் சோதனை நடத்தினார். தம்

மனைவியாருக்கும் தம் மூன்று பையன்களுக்கும் மருந்து செலுத்திச் சோதனை நடத்தினார். தமக்கும் அந்த மருந்தைப் பயன்படுத்திப் பார்த்தார். இந்தச் சோதனைகளும், ஆராய்ச்சிக் கூடப் பரிசோதனைக்கும் அம் மருந்து ஆபத்து இல்லாதது என்பதை உறுதிப் படுத்தின. ஆயினும், இவ்வளவு சோதனைகள் போதா.

எனவே, 1954 வசந்த காலத்தில் நாடு முழுவதும் 4 லட்சத்து 40 ஆயிரம் அமெரிக்கப் பிள்ளைகளுக்கு அம் மருந்து செலுத்தப்பட்டது. வேறு 13 லட்சத்து 90 ஆயிரம் பேரும் இந்தச் சோதனையில் கலந்து கொண்டார்கள். மருந்து செலுத்திய பின், அதன் பயன் எவ்வாறு இருந்தது என்பது ஒழுங்காகக் குறித்து வைக்கப்பட்டது. பின்னர் ஆன் ஆர்பரிலுள்ள மிச்சிகன் பல்கலைக் கழகத்தின் இளம்பிள்ளை வாத மருந்தின் மதிப்பீட்டு நிலையத்தில் அந்தக் குறிப்புக்களெல்லாம் மதிப்பிடப் பட்டது.

1955 ஏப்ரல் 12-ம் தேதி ஆன் ஆர்பரில் அமெரிக்காவின் தலைசிறந்த விஞ்ஞானிகள் கூடியிருந்த கூட்டத்தில் மதிப்பீட்டின் முடிவு தெரிவிக்கப்பட்டது. சால்க் மருந்து சிறிதும் ஆபத்து இல்லாதது; நல்ல பயன் விளைப்பது என்று அறிவிக்கப்பட்டது.

டாக்டர் சால்க்கின் பணியை ஜனாதிபதி ஐஸன்ஹாவர் பாராட்டினார். மக்கள் குலத்தின் நலனுக்காகச் செய்யப்பட்டுள்ள மாபெரும் பணி அது என்று அவர் பாராட்டினார். 1955, ஜூலை 30-ம் தேதி டாக்டர் சால்க்குக்குப் பொற்பதக்கம் வழங்க அதிகாரம் அளிக்கும் மசோதா ஒன்றை அமெரிக்கக் காங்கிரஸ் நிறைவேற்றியது.

சால்க் மருந்தைச் செய்யும் முறை எல்லா நாடுகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. மற்ற நாடுகள் அம்மருந்து உற்பத்தி செய்ய உதவி அளிக்கத் தயாராயிருப்பதாக அமெரிக்கா தெரிவித்தது. சால்க் மருந்து வேண்டுமென்று கேட்ட நாடுகளுக்கு அமெரிக்க மருந்துக் கம்பெனிகள் மருந்தை அனுப்பிவைத்தன. இதுவரை 80 நாடுகளுக்கு மருந்து அனுப்பப்பட்டுள்ளது. இந்த சால்க் மருந்தைப் பயன் படுத்தும் இடங்களில் இளம்பிள்ளை வாத நோய் குறைந்திருக்கிறது.

இன்னொருவனின் அனுமதியின்றி அவனை ஆள் எந்த மனிதனும் தகுதியுடையவன் அல்ல.

—லிங்கன்.

பெனுஸோஸின்: வலி போக்கும் புது மருந்து

வலி தெரியாமல் உறங்கி விடுவதற்கு இப்பொழுது வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வருவது மார்பீன் என்ற மயக்க மருந்து. இதைவிட மிகவும் சக்தி வாய்ந்ததும், ஆனால் பத்திரமானதுமான புது மருந்து ஒன்று அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. "பெனுஸோஸின்" என்பது இப்புது மருந்தின் பெயர்.

புற்று நோய், பிரசவ வேதனை, போன்றதான மிகக் கடுமையான தாங்க முடியா வலிகளுக்கு இந்தப் புதுமருந்து ஒரு சஞ்சீவியாக பலனளித்து வருகிறது. ஆஸ்பத்திரிச் சோதனைகளில் இது 90 சதம் வெற்றி பெற்றிருக்கிறது. மார்பின் மருந்துக்குள்ள வெற்றியை விட இது அதிகமாகும். தேவையான மார்பின் அளவில் மூன்றில் ஒரு பங்கிலிருந்து ஏழில் ஒரு பங்கு வரை இந்தப் புது மருந்தை உட்கொண்டால் போதுமானது.

மார்பின் உட்கொள்வதால் ஏற்படும் சில்லரை உபாதைகள் (குமட்டல், வாந்தி எடுத்தல், ரத்த அழுத்தம் குறைந்து போதல் முதலியன) இந்தப் புதிய மருந்தில் குறைவாகும். பத்திரமாக உபயோகிக்கக் கூடியது. நீண்ட காலத்திற்கும் உபயோகிக்கலாம்.

மார்பின் அளவுக்கு இது "பழக்கமாகி" விடாது.

ரசாயனப் பொருள்களிலிருந்து இதைச் சுலபமாகத் தயாரிக்கலாம். அபினி தேவையில்லை.

தயாரிக்கும் முறை

டாக்டர் இவரெட் ஐ. மே என்பவரும், டாக்டர் நாதன் பி. எட்டி என்பவரும் இந்தப் புது மருந்தைக் கண்டு பிடித்தனர். தயாரிப்பு முறையை இவர்கள் உரிமையாக்கிக் கொண்டாலும் (பேடன்ட்) அமெரிக்க அரசாங்கத்துக்கு அந்தச் செய் முறையின் உரிமைகள் அனைத்தையும் கொடுத்து விட்டனர்.

அமெரிக்க அரசாங்கம் இந்த மருந்தைத் தயாரிக்கும் முறையை உலக நாடுகள் அனைத்துக்கும் யாதொரு கட்டுப் பாடுமின்றி தெரிவித்துள்ளது.

கீல் வாதம் முதலிய நோய்கள் ஆராய்ச்சிக்கான தேசிய கழகத்தைச் சேர்ந்தவர்கள் மேலே குறிப்பிட்ட இரு டாக்டர்களும். உலகில் எல்லா பாகத்திலிருந்தும், இந்த மருந்தைப் பற்றித் தகவல் தெரிவிக்கும்படி சுமார் 70 கோரிக்கைகள் வந்துள்ளன என்று கழகம் நேற்று அறிவித்தது.

ரசாயன சஞ்சிகையின் சென்ற ஆண்டு அக்டோபர் இதழில் இரண்டு விஞ்ஞானக் கட்டுரைகளில் இந்த மருந்தைப்பற்றி முழுத் தகவல்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இந்தத் தகவல்களைக் கொண்டு அந்தந்த நாட்டு மருந்து தயாரிப்பாளர்கள் தங்களுடைய அரசாங்கங்களின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இந்தப் புது மருந்தை தயாரிக்கலாம். அமெரிக்க அரசாங்கம் யாதொரு கட்டணங்களையோ, லைசென்ஸுகளையோ, கட்டுப்பாடுகளையோ விதிக்கப் போவதில்லை. ஆனால் இவ்வாறு வெளி நாடுகளில் தயாரிக்கப்படும் மருந்துகளை அமெரிக்காவில் இறக்குமதி செய்யக் கூடாது.

அமெரிக்காவில் இந்த மருந்தை தயாரிப்பதற்கும் வினியோகிப்பதற்கும் ஆறு கம்பெனிகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் 3000 பேருக்கு மேல் இந்த மருந்து கொடுக்கப்பட்டு சோதிக்கப் பட்டது. மார்பினை விட மிகச் சிறந்தது என்று சோதனையின் விளைவாகத் தெரிந்தது.

மயக்க மருந்து

புது மருந்து ஒரு வழக்கமாகிவிடாதென்றாலும் அது மயக்கமருந்துதான் என்றும், கண்டிப்பான கட்டுப்பாடு மேற்பார்வைகளின் பேரில் தான் இதைத் தயார் செய்ய வேண்டுமென்றும்,டாக்டரின் உத்தரவின் பேரில் டாக்டரின் மேற்பார்வையில்தான் இதை உபயோகிக்கலாமென்றும் கழகம் எச்சரிக்கிறது.

கீல் வாதத்திற்கு, பெனஸோலினை உபயோகிக்கலாகாதென்றும் கூறுகிறது. ஆராய்ச்சித் துறையிலே இது ஒரு முக்கிய முன்னேற்றமென்று கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

"எவன் முயற்சி செய்கிறானோ அவன் அழிவதில்லை" இது கடவுள் வாக்கு. அந்த வாக்கிலே அசைக்க முடியாத நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறேன் நான். —காந்தி.

மனிதனின் வயது
$1\frac{1}{4}$ கோடி ஆண்டுகள்!

—லின் பூல்—

மனித உடலின் தன்மைகள் உள்ள விலங்கினம் தோன்றி எவ்வளவு காலம் இருக்கலாம் என்பது ஒரு ஆராய்ச்சி. அத்துறையில் ஜோஹானஸ் ஹர்ஸெலர் என்னும் சுவிட்ஸர்லாந்து நாட்டு விஞ்ஞானி மூன்று ஆண்டுகளுக்கு முன் புதுமையான கருத்து ஒன்றைத் தெரிவித்தார். மனித உடல் இயல்கள் திட்டமாக உள்ள விலங்கினம் குறைந்தது ஒரு கோடியே இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் இருந்ததாக அவர் கூறினர்.

1956ம் ஆண்டு முதல் இவ்வகை விலங்குகளின் எலும்புகள் மத்திய இத்தாலியில் டஸ்கனியிலுள்ள மென்மையான நிலக்கரிப் பாளங்களில் எடுக்கப்பட்டன. அறுபதுக்கும் அதிகமான எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. 1958, ஆகஸ்ட் 2-ம் தேதி கிட்டத்தட்ட முழு எலும்புக்கூடு என்று சொல்லக்கூடிய எலும்புக்கூடு கிடைத்தது.

இந்தப் பழங்காலத்து எலும்புகளெல்லாம் சுவிட்ஸர்லாந்தில் பேசல் என்னும் இடத்திலுள்ள அரும்பொருள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டன. அங்கு டாக்டர் ஹர்ஸெலரும் மற்ற விஞ்ஞானிகளும் அவற்றைக் கருத்துடன் ஆராய்ந்தார்கள்.

வில்லியம் எல். ஸ்டிராஸ் (ஜூனியர்) என்னும் அமெரிக்கர் மூன்று ஆண்டுகள் ஐரோப்பாவில் தங்கி, முழு எலும்புக் கூட்டை ஆராய்ச்சி செய்து, அண்மையில் அமெரிக்கா திரும்பி வந்துள்ளார். மனித இன வரலாற்று நூலில் புலமை மிக்கவர் அவர்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடு பழங்காலத்துக் குரங்கின் எலும்புக் கூடாகவும் இருக்க முடியாது, மனிதக் குரங்கின் எலும்புக் கூடாகவும் இருக்க முடியாது என்பது அவரது கருத்து. அந்த எலும்புக் கூட்டின் பல், மண்டையோடு, உறுப்புக்கள் முதலியவை அது மனித இனத்தின் மூல வகையைச் சேர்ந்ததாக இருந்தல் வேண்டும் என்று காட்டுகின்றன என அவர் கூறுகிறார்.

மனித இயல்புகள் உள்ளதாக விளங்கிய மிகப் பழங் காலத்து விலங்கு இற்றைக்கு 7 லட்சம் ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்தில்தான் இருந்திருத்தல் வேண்டுமென்று இதுகாறும் கருதப்பட்டது. அக்கருத்தை மாற்றிவிட்டது சில ஆண்டுகளுக்கு முன் இத்தாலியில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய எலும்புக் கூடு.

அந்த எலும்புக் கூட்டை ஆராய்ந்து டாக்டர் ஸ்டிராஸ் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அந்த எலும்புக் கூட்டில் வாழ்ந்த விலங்கு நான்கு அடி உயரம் உள்ளதாக இருந்திருத்தல்வேண்டும்; அதன் எடை 100 ராத்தலுக்குச் சிறிது குறைவாக இருந்திருத்தல் வேண்டும் என்பது அவரது கருத்து.

அந்த விலங்குக்கு ,'ஒரியோபிதிக்கஸ்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அது மனித இனம் தோன்றுவதற்குக் காரணமாயுள்ள விலங்கு என்றே ஹர்ஸெலரும் கருதுகிறார்.

டாக்டர் ஸ்டிராஸ் அவ்வளவு திட்டமாகச் சொல்லாவிட்டாலும், மனிதஇனத்தின் முன்னோருக்கு இருந்த இயல்கள் போன்றவை அந்த விலங்குக்கு இருந்திருக்கின்றன என்று சொல்கிறார்.

Telegrams : MARIGOLD
Phone : 31738

K Perumal Udayar

Importer, Exporter & Manufacturers' Representative

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை,
இறக்குமதி செய்து
கொடுக்கிறோம்.

கே. பெருமாள் உடையார்

55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

இந்த எலும்புக் கூட்டால் தெரியவரும் ஒரு உண்மையை அவர் வலியுறுத்திக் கூறுகிறார். ஒரு கோடியே இருபது லட்சம் ஆண்டுகளுக்கு முன்பே மனித இயல்கள் உள்ள விலங்குகள் இருந்தன என்பதே அவர் கூறும் கருத்து. மனித இயல்கள் உள்ள விலங்குகள் தோன்றியிருக்கக் கூடிய காலம் என்று இதுவரை எண்ணிய காலத்துக்கு இது ஒரு கோடியே பத்து லட்சம் ஆண்டுகளுக்கும் அதிகம்.

மணமகன் தந்த பரிசு!

[டாக்டர் பி. எஸ். சின்னசாமி, பி. எஸ்சி. எம். பி. பி. எஸ்.]

செல்வன் எம். குமாருக்கும் (மானேஜர்— "லலிதா டெக்ஸ் டைல்ஸ்") செல்வி பிரேம ரூபா விற்கும் திருமணம். தன்னுடைய உழைப்பால் உயர்ந்த குமாருக்கு இரண்டு தம்பிகள் உண்டே யொழிய அப்பா, அம்மா யாரு மில்லை. இவ்வரனே நல்ல இடம் என்றே நிச்சயித்திருந்தனர் பிரேம்ரூபாவின் பெற்றோர்கள்.

முகூர்த்தம் முடிந்தது. மூன்று முடிச்சுகளைப் போட்டு விட்டான் குமார். வாசலில் ஒரு பெரிய ஹோட்டலின் பஸ் வந்து நின்றது. அவன் மாமனாரும், மாமியாரும் என்னவென்று பார்கக ஓடி வந்தனர். மோட்டாரோட்டி கதவைத் திறந்து வெளி வந்து "ஸார், உங்களுக்கு ஒரு பார்சல் வந்துள்ளது", என்று கூறி விட்டு, வீட்டிற்குள் நிறைய வாழை இலைகளைப் பரப்பினான். காரைத் திறந்து கொண்டு நான்கு சிப்பந்திகள் தூக்க முடியாமல், நான்கு அலுமினிய அடுக்குகளைத் தூக்கி வந்தனர். அவைகளை இலையில் கவிழ்த்தனர். அவ்வளவும் பொன் நிறமான சூடான வெங்காய பஜ்ஜிகள்! "ஏதுக்கப்பா இவ்வளவு? யார் அனுப்பினார்கள். ஏதோ கேலிக் கூத்தாயிருக்கிறதே"? என்றார் அவர். குமார் சிரித்தவாறு முன் வந்தான்.

"இல்லை மாமா, இது எனது பரிசு. உங்களுக்கும், மாமிக்கும், மாப்பிள்ளை, அளிக்கும் பரிசு, 1000 பஜ்ஜிகள் உண்ணுங்கள்" என்று கடகட வென்று சிரித்தான்.

"என்ன மாப்பிள்ளை. எனக் கொன்றும் புரியவில்லையே" என்றார்.

"புரிய வைக்கிறேன்" கேளுங்கள்.

முதல் தேதி வருமா, வருமா என்று காலண்டரை அண்ணாந்து நோக்கி, அதிகப்படி செலவைக்கண்டு நடுங்கி, எந்தப்புதுச் செலவையும் போனஸ் பணம் வந்ததும் பார்த்துக்கொள்ளலாம் என்று ஒதுக்கி, எப்பொழுதும் ஏதாவது ஒரு...... காரனுக்கு பாக்கிவைத்துக் கொண்டு, நாட்களை ஓட்டிக் கொண்டு வந்தாள் லாவண்யா.

அவள் கணவன் ருத்ரமூர்த்தி, ஒரு பஞ்சு ஆலையில் சாதாரண குமாஸ்தா. மாதம் அவன் கொண்டு வரும் நூற்று மூன்று ரூபாய்களில், எப்படியோ மானத்துடன் காலம் தள்ளினர். அடுத்தடுத்துப்பிறந்த மூன்று குழந்தைகள், எலும்பும், தோலுமாக, ஈர்க்குச்சிக்கால்களுடனும், புடைத்தவயிற்றுடனும் ஓயாமல்

அழுதுகொண்டும் மூக்கைச் சிந்திக்கொண்டும் நின்றன. சிறுவயதிலேயே கணவனால் கைவிடப்பட்ட, முடக்குவாதத்தினால் வருந்தும் அக்காவையும் பராமரித்து, பெருமனதுடன் கஷ்டத்தைப் பகிர்ந்து கொண்டதில் ஓர் ஆறுதல்!

தினமும் காலையில், அலுமினிய டிபன்பாத்திரத்தில் மோர் சாதத்தை ஏந்தி, சங்கு ஊதும் பொழுது, மூன்றுமைல்கள் நடந்து பஞ்சாலையை அடைந்து, இரவுவரை மாடாக உழைத்து, அயர்ந்து திரும்பும் ருத்ரமூர்த்திக்கு லாவண்யா ஒரு ஒப்பற்ற மனைவி. பெயருக்கேற்ற அழகிதான் அவள். வறுமையில் உழன்றபொழுதும், கணவனுக்கு வாழ்க்கையில் வெறுப்பூட்டும் நிலையை ஏற்படுத்தாத பண்புள்ளவள். வாழ்வில் அவனுக்கு அவள்தானே எல்லாம்!

ஒருநாள் வீடு திரும்பிய ருத்ரமூர்த்தி அவள் அன்புடன் கொடுத்த முருங்கை இலைஅடையைத்தின்று விட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். குழந்தைகள் ரேழியில் விளையாடிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது லாவண்யா தயங்கியவாறு அவனிடம் "எனக்குத் தெரிந்த ஒரு வீட்டில் சற்று கூடமாட உதவி செய்ய ஒரு சமையல்காரி தேவையாம். நம் தெருவுக்கு அடுத்த தெருவுதான். இரவிலும், மத்தியானம் பதினொரு மணியிலிருந்து நான்கு மணி வரை வீட்டிற்கு வந்துவிடலாம். மாதம் இருபது ரூபாய் கொடுத்து எனக்கு சாப்பாடும் போட்டுவிடுவார்கள். நீங்கள் சம்மதித்தால்...?" என்று கூறி முடிப்பதற்குள் அவள் கண்கள் கண்ணீரால் நனைந்தன.

அவன் அன்புடன் "லாவண்யா நீ பரம ஏழையாய் இருந்தால் தான் வேலையில் ஈடுபட முடியும். வேலைக்காரர்களை அதுவும் சமையற்காரர்களை மிகவும் கீழ்த்தரப்பட்ட மனிதர்களாக மதித்து நடத்துவார்கள். அதை உன்னால் தாங்கவே முடியாது. ஜீவனத்திற்கு வேறு வழியற்றவர்களால் தான் எஜமானியம்மாக்களின் சுடுசொற்களைத் தாங்க முடியும். கஞ்சியோ, கூழோ கிடைத்ததை நாம் பகிர்ந்து கொள்ளலாம். நீ எதற்காக உன்னை வருத்திக் கொள்ளவேண்டும்? என் எஜமானரிடம் பதினைந்து ரூபாயாவது சம்பள உயர்வு தரும்படி வற்புறுத்தி வேண்டியுள்ளேன்" என்றான்.

"இல்லை, நீங்கள் இபபடிச் சொல்லக்கூடாது. நான் இப்பொழுது இரண்டு மாதமாய் முழுகாமல் இருக்கிறேன். ஒரு பத்து ரூபாயாவதுமிச்சப்படுத்தி வைத்தால் தான் நலம்," என்றாள்.

வேண்டா வெறுப்பாய் ஒருவாறு சம்மதித்தான் ருத்ரமூர்த்தி. தன் மனைவி ஒரு சமையற்காரி என்று கூறிக்கொள்வது ஆண்களுக்கு இந்த தேசத்தில் கௌரவக் குறைவு என்பது யாவரும் அறிந்ததே.

புது வேலையில் தீவிரமாக ஈடுபட்டுவிட்டாள் லாவண்யா. அவ்வேலைக்குச் சென்ற இடத்தில்

Maniyam Industrial & Engineering Works

Government approved Fabricator, Contractor.

(Regd. No. 5.)

A.C.C CEMENT STOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

முதல் நாளே அவ்வீட்டு எஜமானியம்மாள், "இந்தாம்மா, உன்னை நம்பித்தான் இங்கு வைக்கிறேன், கை சுத்தமாய் இருக்கவேண்டும். வேண்டுவன நீ சாப்பிடத்தடையில்லை. ஆனால் வீடு, கூடு என்று நீ எதையும் எடுத்துச் செல்வதை என் கணவர் ஒப்பமாட்டார்" என்று கூறி விட்டாள்.

அக்குடும்பம் சிறியதுதான். அதிக வேலை என்று கூற முடியாது. யாவரும் அவளிடம் அன்பாகவே இருந்தனர். ஒரு மாதம் சென்றிருக்கும். லாவண்யாவின் உடல் நன்கு பூரித்து, சிறிது சதையும் பிடித்தது. வயிற்றில் கரு வளரும் பொழுது பெண்கள் சற்று பூசினாற் போல் காண்பர். வேளா வேளைக்கு நல்ல சாப்பாடு, நிறைய காய்கறிகளுடன், பால், மோர், நெய், எண்ணை இவைகளுடன் கிடைத்ததல்லவா?

ஒருநாள் வீடு திரும்பிய உடன் அவள் கையை முகர்ந்து பார்த்தான் மூத்த குழந்தை குமார். கை வெங்காயம் மணத்தது. "அம்மா, பூரி உருளைக்கிழங்கு சாப்பிட்டாயா? எனக்கு ஏன் கொண்டு வரவில்லை?" என அழ ஆரம்பித்து விட்டான். குழந்தையை போக்குக் காட்டி சமாதானமடையச் செய்வதற்குள் லாவண்யாவிற்கு போதுமென்றாகி விட்டது. பிறகு அவன் தூங்கி விட்டான்.

ஆனால் அவள் உள்ளம்! ஒவ்வொரு நாளும் எஜமானி வீட்டில் இலைமுன் உட்கார்ந்ததும், தன் குழந்தைகள் நினைவு தான் அவள் உள்ளத்தைத் தொடும். தான்-

இங்கு அறுசுவை உணவருந்த, தன் குழந்தைகள் பழைய சோறும், ரஸஞ்சாரும், யாரும் வேண்டாத சர்க்கரை வள்ளிக் கிழங்கு கறியையும் தின்னும் நினைவு ஏற்படும். துக்கம் தொண்டையை அடைக்க சாப்பிட்டதாக பேர்பண்ணி எழுந்து விடுவாள்.

தனக்குகிடைக்கும் புழு, பூச்சிகளை அலகில் கொத்திக்கொணர்ந்து, இறக்கை முளைக்காத தன் குஞ்சுகளுக்கு கொடுக்கும் பறவைகளுக்குள்ள அத்தாய்மை உணர்ச்சிகூட அவளிடம் இல்லையா? எஜமானி மட்டும் உணவை வீட்டிற்கு எடுத்துச்செல்லதயவு காட்டினாளானால், யாவற்றையும் குழந்தைகளை உண்ணச்செய்து, தான் பழைய சோறு உண்பதில் பெருமகிழ்ச்சி கொள்வாளே!

ஒருநாள் டிபனுக்கு வெங்காய பஜ்ஜி செய்யும்படி எஜமானியம்மாள் பணித்தாள். பஜ்ஜி வெகு பிரமாதமாய் பொன்னிறமாக அமைந்துவிட்டது. வெங்காய பஜ்ஜி என்றால் ருத்ரமூர்த்திக்கு உயிர். வாணலியிலிருந்து சுடச்சுட எடுத்துப்போட்டால், ஒரே மூச்சில் இரண்டு டஜன்களை உள்ளுக்கிழுத்துவிடுவான்—சூட்டையும் பொருட்படுத்தாமல் நெருப்புக்கோழிபோல். வீட்டில் யாவருக்கும் டிபனுக்கு பஜ்ஜி வழங்கியபின் அவள் பங்குக்கு ஒரு ஏழு எட்டு பஜ்ஜிகள் மிஞ்சின. மெதுவாக தின்னலாம் என்று அவற்றைத்தனியே மூடி வைத்த லாவண்யாவிற்கு வீட்டிற்குத் திரும்பும் முன்தான் அதன் நினைவு வந்தது.

ஒருசபலம் இவற்றை வீட்டிற்கு எடுத்துச்சென்று கணவன் வாயில் போட்டால்.........இளமை நினைகள் கன்னங்களில் குழி விழச்செய்தன. நினைவைச்செயலாக்க பஜ்ஜிகளை ஒரு சிறு காகிதத்துண்டில் பொட்டலமாக கட்டி, புடவை மடிப்புக்குள் செருகிவிட்டாள். தற்செயலாக இதை கதவின் மறைவிலிருந்த குழந்தை லல்லுபார்த்துவிட்டு "அம்மாம்மா, மாமி எதையோ மடியில் வைத்திருக்கிறாள்" எனக் கூறியது. இதொன்றும் அறியாத லாவண்யா வழக்கம்போல், "போய் வருகிறேன், அம்மா," எனக்கூறி புறப்பட்டாள். அதைக் கூறுவதற்குள் அவள் மிகவும் திணறிவிட்டாள்.

வீட்டு எஜமானி அழுத்தமான குரலில் "மடியில் என்ன" என்று கேட்டாள். முகம் சுருங்கி, வியர்வை அரும்ப லாவண்யா "அம்மா, இன்று உடம்பு ஒருமாதிரி இருந்ததால், என் பங்கு பஜ்ஜியை வீட்டிற்கு எடுத்துச்சென்று உண்ணலாமென......"

அதற்குள் எஜமானி உக்கிரத்துடன், "போக்கிரி ஜன்மங்கள், இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குகின்ற கதையாய் இருக்கிறது. உன் பங்கு என்று ஏதாவது எழுதி வைத்திருக்கிறதா? இங்கே சாப்பிடலாமேதவிர, வீட்டிற்கு எடுத்துச் செல்ல அனுமதியில்லை என்று, நீ வேலைக்கு வந்த தினமே நான் கண்டிப்பாகக் கூறவில்லையா? வர வர வீட்டில் சாமான்கள் குறையும் காரணமும் இப்பொழுதுதான் தெரிகின்றது. நீ சாமான்களை மடியில் கட்டிக் கொள்வதை இன்று குழந்தை கண்டுபிடித்து விட்டாள்," எனக் கூறி அவள்

மடியை முரட்டுத்தனமாக பற்றி இழுத்தாள். மடியில் இருந்து விழுந்த பொட்டலத்திலுள்ள பஜ்ஜிகள் சிதறின. லாவண்யா வைத் திருடியாக்கிய இரண்டணு மதிப்புள்ள எட்டு பஜ்ஜிகள்?

எஜமானியின் கோபம் உச்ச நிலையை அடைய, அவள் லாவண் யாவை திருட்டு முண்டமே என ஏசி, இனி அவள் வேலைக்கு வர வேண்டிய அவசியமில்லை எனக் கூறி அன்றுடன் அவளுக்குரிய சம்பளத்தைக் கையில் வைத் தாள். பதில் ஏதும் கூருது திரும்பிய லாவண்யாவிடம், திடீ ரென்று ஏற்பட்ட ஏதோ ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்டு, "இந்தா பிள்ளைத்தாச்சிப்பெண், பஜ்ஜியை எடுத்துச் செல்" எனக் கொடுத்தாள்.

கண் கலங்க வீடு திரும்பிய லாவண்யாவின் கையிலுள்ள பொட்டலத்தை லபக்கென்று பிடுங்கினுன் அவள் பையன். அத்துடன் ஒன்றை வாயிலும் போட்டுக்கொண்டான். கரை கண்ட துக்கத்தின் விளைவு கோபம்தான். வெறி பிடித்தவள் போல் லாவண்யா அவனை "துப்பு வாயிலுள்ளதை" என கர்ஜித்ததுடன் நில்லாமல், விசிறிக் கட்டையால் அவனை கண், மூஞ்சி என பாராமல் அடித்து விட்டாள்.

குழந்தை துடித்த பொழுது, இரண்டு வலுவான கரங்கள் விசிறிக் கட்டையைப் பிடித்தெறிந் தன. திடீரென்று வீட்டிற்குச் சற்று முன்னதாகப் புறப்பட்ட ருத்ரமூர்த்தியின் கரங்களே அவை. லாவண்யா அக்கரங்க ளில் மூர்ச்சித்தாள்.

அவள் கண் விழித்தபொழுது பல கட்டுக்களுடன், தன் மகன் அருகில் படுத்துக் கிடப்பதை உணர்ந்தாள். அத்துடன் அவ ளருகில் ஒரு சிறு ஜீவன் குவா, குவா என முனகிற்று. எல்லாம் இரண்டு மணி நேரங்களில் நடந் தவையே. நிறை சூலியான அவள் மயக்கமுற்றதும், ஆஸ்பத்திரி தில் சேர்க்கப்பட்டு குழந்தை பிறந்து விட்டது. அவள் கண வன் அவள் கரங்களைப்பற்றிய வாறு, "லாவண்யா, உனக்கு ஓர் சந்தோஷ சமாசாரம் சொல்லவே, வழக்கத்திற்கு விரோதமாக சீக் கிரம் திரும்பி வந்தேன். ஆபீ ஸில், இன்று முதல் என்னை சார்ஜ்ஜண்டாகஉயர்த்திவிட்டார் கள். மாதம் 300 ரூ. சம்பளம். இங்கே என்னடா என்ருல், நீ காளிபோல்..." என்ருன். லாவ ண்யா மகிழ்ச்சியில் திணறிய பொழுது, அவன் புதுக்குழந்தை யின் கன்னத்தைத் தடவிய வாறு, பஜ்ஜிபோல் இருக்கிரு னே பையன் என்ருன். அதைக் கேட்ட லாவண்யா உணர்ச்சி வசப்பட்டவளாய், "எதைச் சொன்னுலும், பஜ்ஜி என்று மட் டும் சொல்லாதீர்கள்," என வேண்டினுள்.

அந்த சமையற்காரியின் மகன் 'குமார்' என்று கூறினேன் அல் லவா? நானே அந்த மோஹன் குமார். அம்மா, அப்பா காலமாகி விட்டார்கள். ஆகவே என் தா யைத் திருட்டுப் பட்டம் கட்டின உங்களுக்கு—ஈவு, இரக்கமற்ற உங்களுக்கு—200 ரூபாய்க்கு பஜ்ஜிகள் என் வெகுமதியாக அளிக்கின்றேன்.

தவறிய கடிதங்கள்

"அமலன்"

விஜயபுரம்,

20—2—60.

இனிய கனி மொழிக்கு!

இன்று கல்லூரிக்கு வந்திருப்பாயென நம்புகிறேன். லீவில் நீ சென்னையிலிருந்தபோது வீட்டு விலாசத்திற்கு பத்து கடிதங்களும், ஆறு அழகிய காலண்டர்களும் அனுப்பினேன். ஒரு கடிதத்திற்காவது பதிலைக்காணுமே! காரணம்?

உன் மதிலுக்காக எதிர்பார்த்து என் கண்கள் ஏங்கின. மனமோ? இலையுதிர்ந்த மரம் போல் வெறிச் சோடிக்கிடந்தது. இப்படித்தவிக்க விடலாமா?

விவரங்களுக்கு உடனே பதில்.

அன்புள்ள,
'அமலன்'

சிதம்பரம்,
21—2—60.

அன்புள்ள அமலன் அவர்களுக்கு,

வணக்கம்.

கல்லூரி விலாசத்திற்கு எழுதிய கடிதம் கிடைத்தது. நீங்கள் அனுப்பியதாகக் கூறும் அத்தனைக்கடிதங்களில் ஒன்றேனும் எனக்குக்கிடைக்காதது பெரும் வியப்பாக இருக்கிறது. இத்தனைக்கும் நான் வீட்டில்தான் இருந்தேன். ஒருவேளை விலாசத்தைத் தவறுதலாக எழுதினீர்களோ?

காதல் கடிதங்களை எல்லாம் கல்லூரியோடு வைத்துக்கொள்ளுங்கள் என்றால் கேட்டால் தானே! இப்போது துணிச்சலுடன் வீட்டிற்கு வேறு எழுதிவிட்டீர்கள். அவ்வளவு கடிதங்களும், அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் கையில் சிக்கி அப்பா காதிற்கு எட்டியிருந்தால் என் கதி அதோகதிதான். அவருக்குக் காதல் 'கீதல்' என்றால் கட்டோடு பிடிக்காது. கடவுள்தான் அந்தக் கடிதங்களைக் காப்பாற்ற வேண்டும்.

மிக்க அன்புடன்,
கனிமொழி.

விஜயபுரம்,
22—2—60.

இனிய கனி மொழிக்கு!

உன்பதில் கடிதம் என்னைத் தூக்கிவாரிப்போட்டு விட்டது. ஆம்! அத்தனைக் கடிதங்களும் காலண்டர்களும் எங்கே

போயிருக்கும்? சாதாரண கடிதங்களா அவை? காதற் சோலையில் மலர்ந்த கதம்ப மலர்கள் அல்லவா? அதில் ஊறிய ஒவ்வொரு எழுத்துக்களும் தித்திக்கும் தேனுயிற்றே!

இத்தனைக்கும் முகவரியை விவரமாகவும், தெளிவாகவும் தான் எழுதினேன். இதில் ஏதோ மர்மமிருக்கிறது. புரசைவாக்கம் போஸ்ட்மாஸ்டருககு புகார் செய்து இரண்டில் ஒன்று பார்த்து விட்டுத்தான் மறுவேலை. கனிமொழி நீ கவலைப்படாதே!

அன்புள்ள,

அமலன்.

விஜயபுரம்

22—2—60.

பேரன்புமிக்க புரசைவாக்கம் போஸ்ட்மாஸ்டர் அவர்களுக்கு அமலன் வணக்கத்துடன் வரைவது:—

ஐயா! இப்பவும் கனிமொழி 3 நெ. முருகப்ப முதலித் தெரு, புரசைவாக்கம், சென்னை-10, என்ற முகவரிக்கு பத்து கவர்களும், ஆறு புத்தக அஞ்சல்களும் அனுப்பினேன். அவற்றில் ஒன்றேனும் விலாசதாருக்குக் கிடைக்கவில்லையாம். அவர்கள் வீட்டிலிருந்தும் குறிப்பிட்ட தபால்கள் கிடைக்கவில்லை என்ருல் வியப்பாக இல்லையா?

ஒன்று, இரண்டு என்ருல் தவறுவதற்கு இடமுண்டு. ஒரே விலாசதாருக்கு எழுதிய அத்தனைக் கடிதங்களும், எங்கே போயிருக்கும்? ஒவ்வொரு கடிதமும், விசேஷ மதிப்பும், முக்கியத்துவமும் கொண்டது. அனுப்பிய காலண்டர்களின் அழகை சொல்லி முடியாது.

ஆகையால் அன்புகூர்ந்து புரசைவாக்கம் 'பீட்' போஸ்ட்மேனை விசாரித்து விவரம் தெரிவிக்கவும். உடனடியாக பதில் எழுதுவதற்கு என் விலாசமிட்ட கவர் ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன்.

சிரமத்திற்கு மன்னிக்கவும்.

அன்புள்ள,

அமலன்.

பின் குறிப்பு :— காலண்டர்களைப் பற்றிக் கவலையில்லை. கடிதங்கள் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்துங்கள். 'பிளீஸ்!'

புரசைவாக்கம்,

24—2—60.

அன்புடையீர் !

தங்களின் புகார் கடிதம் கிடைத்தது. குறைகளை கவனத்திற்குக் கொண்டு வந்தமைக்கு நன்றி. ஆனல், பெரும்பாலும், சாதாரண கடிதங்கள் சம்பந்தமாக எவ்வித நடவடிக்கைகளும் சட்டப்படி எடுத்துக் கொள்ள இயலாது. காரணம் அனுப்புவோரின் அஜாக்கிரதையால் எதிர்பாராத சில தவறுகள் ஏற்படுவது இயற்கை.

முக்கியமாக, நீங்கள் குறிப்பிட்ட தபால்கள் எல்லாம், உங்களால்தான் தபால் பெட்டியில்

வேட்கோவன்.

மண்பாண்டத் தொழிலாளர் நலன் கருதிய
ஒரே மாத ஏடு

ஆசிரியர் : க. முத்துக்குமாரசாமி

ஆண்டுக் கட்டணம் ரூ. 2

இன்றே உங்களைச் சந்தாதாரராகப் பதிவு
செய்து கொள்ளுங்கள்

விவரங்கட்கு :

வேட்கோவன் அலுவலகம்

2, போல் நாராயண பிள்ளைத் தெரு,

சிதம்பரம்.

போடப்பட்டதா? அல்லது ஆள் மூலம் அனுப்பினீர்களா? என்று குறிப்பிடவில்லை. பொதுவாக, பதிவு அஞ்சலுக்குப் பயந்து கொண்டு சாதாரண கவரில் கரன்ஸி நோட்டை வைத்து அனுப்புவோரும், காலண்டர்களை புத்தக அஞ்சலில் அனுப்புவோரும், காதல் கடிதங்களை வீட்டு விலாசத்திற்கு எழுதுவோரும் பரிதாபத்துக் குரியவர்கள் தாம்!

புரசைவாக்கம் 'பீட்' தபால்காரரை விசாரித்ததில் அப்படி ஏதும் வந்ததாக ஞாபகமில்லை எனக் கூறுகிறார்.

தபால்காரர் தங்கசாமியைப் பொறுத்தவரை அவர் தங்கமான மனிதர். வயதும், அனுபவமும் முதிர்ந்தவர். வேலையில் இதுவரை அப்பழுக்கில்லை. தினமும் ஆயிரமாயிரம் கடிதங்களை வினியோகம் செய்யும் அவருக்கு குறிப்பிட்ட உங்கள் கடிதங்களைப் பற்றி நினைவு இருக்க நியாயமில்லைதான். என்ன செய்வது?

ஆகையால் காணமற்போன உங்கள் கடிதங்களுக்கு எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள முடியாமைக்குப் பெரிதும் வருந்துகிறேன். இனியாவது இம் மாதிரி முக்கியக் கடிதங்களைப் பதிவு அஞ்சலில் அனுப்புதல் நலமென்று உங்கள் நலன் கருதி குறிப்பிட விரும்புகிறேன்.

அன்புள்ள,

பொன்னம்பலம்,

போஸ்ட்மாஸ்டர்.

சென்னை-600 008

விஜயபுரம்,

25—2—60

தபால்காரர் தங்கசாமி அவர்களுக்கு அமலன் எழுதுவது:—

ஐயா! நீங்கள் மிகவும் நல்லவர் என்று அறிந்து என் உள்ளத்தைத் திறந்து கேட்கிறேன். அவ்வளவு கடிதங்களும் என்ன ஆயிற்று?

நான் கடிதங்களும், காலண்டர்களும் அனுப்பியது உங்கள் கவனத்தைக்கவராமல் இருக்கமுடியாது. போஸ்ட் ஆபீஸுக்கும், வீட்டிற்கும் உள்ள நெடுந்தூரத்தை நினைத்து, அன்ருடம், தங்களை ஈக்கள்போல் மொய்த்துக்கொள்ளும், அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் வாயிலாக என் கடிதங்களை கொடுத்தனுப்பினீரா? அல்லது உங்கள் அடுப்பிற்கு அனல்மூட்ட பயன் படுத்தினீர்களா?

எல்லாம் என்னுடைய மதிப்பையும், மற்ருெரு பெண்ணின் வாழ்வையும், காப்பதற்கு ஆதாரமாயுள்ள கடிதங்கள் ஐயா அவை?

காலண்டர்களைப்பற்றிக் கவலையில்லை. கடிதங்களைப்பற்றி யாவது விவரம் தந்து உதவுங்கள்.

நீங்கள் செய்யும் இந்த உதவிக்குப் பிரதி நன்றியாக எங்கள் கல்யாணத்தின்போது உங்களுக்கு ஒரு சரிகை வேஷ்டியும், பட்டுச்சட்டையும் சன்மானம் தருகிருேம். தயவு செய்யுங்கள்.

உங்கள் ஆதரவான பதிலுக்காக இத்துடன் விலாசமிட்டவர் வைத்திருக்கிறேன்,

அன்புள்ள,
அமலன்.

புரசைவாக்கம்
26—2—60.

அன்புள்ள அமலன் அவர்களுக்கு தபால்காரர் தங்கசாமி, வணக்கத்துடன் எழுதுவது:—

எண்ணக்கடலில் மறைத்து வைக்கவேண்டியதெல்லாம் என்னிடம் திறந்துகாட்டிய உங்களிடம் என் உள்ளத்தைத்திறந்து உண்மையைக் கூறுகிறேன்.

உங்களது முதல் கடிதத்தை அறிந்தோ அறியாமலோ பிரித்துப்படித்தேன். ஆகா! கடிதமா அது? காதல் களஞ்சியமல்லவா? பிறகு கேட்பானேன்! அடுத்து வந்த எல்லாக்கடிதங்களையும் நானே படித்துவிட்டு அடுப்பில் போட்டுவிட்டேன். அழகான காலண்டர்களை மட்டும் அப்படிச் செய்யமனமில்லை. ஏன் அப்படிச் செய்தேன் என்கிறீர்களா? காதல் மீது எனக்கு நம்பிக்கையே இல்லை.

இளம் வயதில் நானும் உங்களைப்போலத்தான் ஒரு காதல் பயித்தியமாக இருந்தேன்; திரிந்தேன்; எழுதினேன். கடைசியில் கண்டபலன் தோல்வி! பெரும் தோல்வி!!

காதலுக்கும் தோல்விக்கும் நெருங்கிய நட்பு உண்டு போலும்!

இவ்வளவையும் நான் சொல்லக்காரணம் கனிமொழியை பாப்நாசத்தில் உள்ள பாக்கியசாமி என்ற பையனுக்குக் கொடுப்பதாக அவள் தந்தை, பையனின்

தந்தைக்கு வாக்குக்கொடுத்து விட்டார். பெற்றோர்களின் முடிவை யாராலும் மாற்றமுடியாது. ஆகையால் எட்டாக் கனியாகிய கனி மொழியை மறந்து விடுங்கள்.

அவள் ஏழை. ஏதோ சர்க்கார் சலுகையில் கல்லூரியில் படிக்கிருள். கல்யாணம் நிச்சயமாகும் சமயத்தில் உங்கள் காதல் கடிதங்களால் அவளது வாழ்விற்குக் களங்கம் ஏற்படக்கூடாதே என்றுதான் அக்கடிதங்களை அடுப்பில் போட்டேன்.

இதையெல்லாம் செய்ய இவன் யார்? என்கிறீர்களா? நான்தான் சாட்சாத் கனிமொழியின் தந்தை. சொந்த மகளுக்கு வந்த கடிதத்தைப் படித்துப் பார்க்கும் உரிமை இல்லையா எனக்கு?

இனியாவது கனிமொழியின் வாழ்க்கையில் குறுக்கிடமாட்டீர்கள் அல்லவா.

அன்புள்ள,
தங்கசாமி.

சிதம்பரம்
27—2—60

அன்புள்ள அமலன் அவர்களுக்கு வணக்கம்,

தங்களிடமிருந்து சில நாட்களாய் கடிதம் வராதது கவலையாக இருக்கிறது. காதல் கடிதங்கள் எல்லாம் என்ன ஆயிற்று?

அப்பா! என்னை பாபநாசம் வரனுக்குத் தருவதாக வாக்களித்து விட்டாராம். என் புகைப்படத்தையும், ஜாதகத்தையும் அனுப்பியிருக்கிருர். அப்பாவும், மாப்பிள்ளையின் தந்தையும் பாலிய நண்பர்களாம். இம்மாதக் கடைசியில் அவர்கள் பெண்பார்க்க வருவார்கள் என்று கடிதம் எழுதி லீவு போட்டு வரும்படி என்னை அழைத்திருக்கிருர். எனக்குப் பாடம் ஓடவில்லை, படுக்கையில் உறக்கம் கொள்ளவில்லை. நீங்கள்தான் நம் காதல் பாதைக்கு வழிகாட்ட வேண்டும். கடலில் குதிப்ப தென்ருலும் 'ரெடி!'

உங்கள் வழிமேல் விழிவைத்திருக்கும்,
கனி மொழி.

விஜயபுரம்,
28—2—60.

இனிய கனிமொழியே!
கவலைப்படாதே!

''காதல்பாதை கரடுமுரடானது'' என்பது பழமொழி. ஆனல் நம் இருவர் விஷயத்தில் சௌகரியமாகவே அமைந்து விட்டது. என் தந்தை இன்று ஒரு பெண்ணின் புகைப்படத்துடன் என்னைத் தேடி வந்தார். என்ன அதிர்ஷ்டம்! அந்தப் பெண் நீயே தான். நம் தந்தை இருவரும் பாலிய நண்பர்கள் என்ருல் நாமிருவரும் வாலிபக்காதலர்கள். என்ன ஒற்றுமை? என்ன பொருத்தம்?

காதல் கடிதங்கள் எல்லாம் ''அமலன்'' என்ற புனைபெயரில் தானே எழுதினேன். அதைப் பற்றிக் கவலை இல்லை. காரணம் என் உண்மைப் பெயர் பாக்கியசாமி என்று யாருக்குத் தெரியும்?

கதைக்கும் காதலுக்கும் உதவாத 'அமலன்' என்ற புனைபெயருக்கு இன்றோடு முழுக்குப் போட்டுவிட்டு, உண்மையான பாக்கியசாமியாய் இம்மாதக் கடைசியில் பெற்றோர்களுடன், பெண் பார்க்க வருகிறேன். சம்மதம்தானே! அன்புள்ள,
அமலன்.
(மன்னிக்கவும்
—பாக்கியசாமி—

கொழும்பு திட்ட மான்யம் பெற்ற இந்தியர்கள்

சென்ற ஆண்டில் கொழும்பு திட்ட தொழில்நுட்பக் கூட்டுறவு ஏற்பாட்டின்கீழ் 271 இந்தியர்கள், சிறப்புப் பயிற்சி பெற பிரிட்டனுக்கு வந்தார்கள். இவர்களில் 94 பேர்கள் துர்க்காபூர் எஃகுத் தொழிற்சாலையில் நிர்வாகப் பொறுப்பு ஏற்கும் பயிற்சியாளர்கள். மற்றவர்கள் விவசாயம், வங்கித் தொழில், நிலக்கரி சுரங்கவியல், பொருளாதாரம், பொறியியல், வனவளம், தொழில் நிர்வாகம், வைத்தியம், தாவர நோய்த் தடுப்பு, நில அளவை, தந்திப்போக்குவரத்து முதலிய துறைகளில் பயிற்சி பெற வந்தவர்கள்.

* * *

கதிரியக்கத்தின் அற்புதம்

உணவுப் பொருள்கள் அழுகிக் கெட்டுப் போவதற்குக் காரணமாகவுள்ள "என்ஸைம்" பொருள்களைக் கதிரியக்கம் அழித்து விடுகிறது. இவ்வாறு "என்ஸைம்" போக்கிய உணவுப் பண்டங்களைச் சாதாரண பிளாஸ்டிக் பைகளில் சுற்றி எடுத்து வைத்துக் கொள்ளலாம்; அவை எவ்வளவு காலமானாலும் கெட்டுப் போகா. குளிர் பதனம் செய்தல் முதலிய வேறு ஏற்பாடு எதுவும் தேவை இல்லை. எனவே, தற்கால வசதி கிட்டாத எட்டாத் தொலைவிலுள்ள மக்களுக்கும் உணவு வசதியைப் பெருக்க வழி கிடைக்கிறது.

உணவுப் பண்டங்களுக்குக் கதிரியக்கம் ஏற்றிக் காக்கும் முறைகள் இன்னும் சோதனைக் கட்டத்தில்தான் உள்ளன. எனினும், அமெரிக்கர் பலர் தாமாகவே முன் வந்து கதிரியக்கம் பாய்ச்சிய உணவுப் பண்டங்களை உண்டு உயிர் வாழ்ந்து வருகின்றனர். இரண்டு ஆண்டுகளாக இவர்கள் இவ்வாறு வாழ்ந்து வருகிறார்கள். எவ்விதக் கெடுதலும் அவர்களுக்கு ஏற்படவில்லை. கதிரியக்கம் பாய்ச்சிப் பக்குவப் படுத்திய உணவில் கதிரியக்கம் தங்கியிருந்து தீமை விளைப்பதில்லை.

* * *

கம்பளம், சணல் நாரிலிருந்து விரிப்புகள் தயாரிப்பு

சணல் நாரினலான விரிப்புகள், கம்பள விரிப்புகள் ஆகியவைக



சென்னை புளியந்தோப்பு இந்திரா காந்தி ஹரிஜன சேவா சங்க முதலாண்டு விழாவில் அமைச்சர் கனம் பி. கக்கன் உரை நிகழ்த்துகிறார். படத்தில் விழாவிற்கு தலைமை வகித்த ஸ்ரீ என். ஜெகதீசன் எம். சி. அவர்களையும், "தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்களையும் காணலாம்.

ளின் தேவை அதிகரித்து வருவதைச் சரிகட்டுவதற்காக அரசாங்கம் ஒரு திட்டத்தை அனுமதித்துள்ளது. சேலம் மாவட்டத்தில் கணிசமான அளவில் கிடைக்கும் சணல் நாரையும், வடாற்காடு மாவட்டம் விண்ணமங்கலத்தில் நிறுவப்படும் கம்பள நிலையத்திலிருந்து மலிவான விலையில் கிடைக்கக்கூடிய கம்பள ரோமத்தையும் பயன்படுத்திக் கொள்வதற்கு அத்திட்டம் வகை செய்யும். சணல் நார், கம்பள ரோமம் ஆகியவைகளிலிருந்து விரிப்புகள் தயாரிப்பதற்கான, அத் தொழிற்சாலையை சேலம் மாவட்டத்தில் ஏற்படுத்த அனுமதிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு ரூ. 11,000 மூலதனச் செலவும், ரூ. 77, 900 நடைமுதல் செலவும் ஆகும்.

* * *

யந்திரங்களை, தவணைகளில் பணம் கட்டி வாங்கும் முறை

தேசீய சிறு தொழில் கார்ப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட் மூலம், தவணை முறையில் பணம் கட்டி யந்திரங்களை வாங்குவதில், சிறிய தொழில் அதிபர்களுக்கு, அச்சிடப்பட்ட நமூனு பாரங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்றும், அதனுல் தாமதம் ஏற்

படுவதாகவும் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அத்தகைய தொழில் அதிபர்களுக்கு உதவும் முறையில் மாவட்டங்களிலுள்ள கைத்தொழில் வர்த்தக உதவி நெறியாளர் அலுவலகங்களில் அந்த நமூனுக்களை இருப்பில் வைத்திருக்க அரசாங்கம் அதிகாரமளித்திருக்கிறது. அந்த நமூனுக்கள் வேண்டுவோர் மாவட்டங்களில் கைத்தொழில் வர்த்தக உதவி நெறியாளரிடமிருந்து அடக்க விலையில் அவைகளைப் பெறலாம்.

* * *

கிருமிகளைக் கொல்ல புதிய பூச்சு மருந்து

மனிதனுக்கு ஓயாத தொல்லை தரும் கிருமிகளில் ஒன்று ஸ்டாஃபிலோ-காகஸ், உடலில் கட்டிகளும் பருக்களும் தோன்றுவதற்கும், இரணத்தில் சீழ் கோத்துக் கொள்ளவும், கப ஜுரம் பரவவும் இது துணை செய்கிறது. பெனிஸிலின் கண்டு பிடிக்கப்பட்டபோது, இந்தக் கிருமிகளை ஒழித்துவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் இந்தக் கிருமி பெனிஸிலினை எதிர்த்து நிற்கும் ஆற்றலை வளர்த்துக் கொண்டு மனிதனை ஏமாற்றிவிட்டது.

இந்தக் கிருமிகள் சருமத்திலும், கைகளிலும், மூக்கிலும் தொற்றிக் கொண்டு பலுகுகின்றன. ஆரோக்கியமாகயிருப்பவர்களையும், டாக்டர்களையும், நர்ஸுகளையும்கூட இந்தக் கிருமிகள் பற்றிக்கொள்கின்றன. இவற்றை ஒழிப்பது பற்றி ஆராய பிரிட்டிஷ் சுகாதார அமைச்சகம் சிறப்புக்குழு ஒன்றை நிறுவிற்று. இந்தக் குழு சேகரித்த தகவல்களிலிருந்து ஸ்டாஃபிலோகாகஸ் கிருமிகள், மூக்கில் தங்கி பலுகுகின்றன என்று தெரிந்தது. இந்தக் கிருமிகள் மூக்கில் அடையாதபடி தடுக்க முயற்சி எடுத்துக் கொண்டால், விளைவுகளைத் தடுத்துவிடமுடியும் என்று தெரிந்தது. இந்தக் கிருமிகள் கைகளிலும் சருமத்திலும் தொற்றிக் கொண்டு பரவினுலும் வாய்ப்புக் கிடைத்தால்தான் விபரீதங்களுக்கு வித்திடும். வைத்திய சாலைகளிலும் பேறுகால விடுதிகளிலும் பணியாற்றும் தாதிகளும் பிறரும் நோயாளிகளுங்கூட-மூக்கில் தடுப்பு மருந்தைத் தடவிக் கொண்டால் இவற்றை, விரட்டிவிட முடியும். பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் 'நாஸப்டின்' என்றதோர் தடுப்பு மருந்தை கண்டு பிடித்திருக்கிருர்கள். நியோமைஸின் என்ற பெனிஸிலின் இன மருந்தும் குளோர் ஹெக்ஸிடின் என்ற மருந்தும் ஸ்டாஃபிலோகாகஸ் கிருமிகளைக் கொல்லும் ஆற்றலுள்ளவை. நாஸப்டின் என்ற பூச்சுமருந்தில் இவை இருக்கின்றன. தினசரி இரண்டு வேளை இந்த பூச்சு மருந்தை மூக்கில் தடவிக்கொண்டால் நல்ல பயன் கிடைக்கும்.

கட்டிகளால் அடிக்கடி பாதைப்படும் நோயாளிகள் இந்தமருந்தை தவருது உபயோகித்ததில் பத்துக்கு எட்டுப்பேர்கள் குணமடைந்தார்கள். இந்தக் கிருமிகள் விளைவிக்கும் தொல்லைகள் அதிகம். சீழ் பிடித்து கஷ்டப்படுவதை எவரும் விரும்பமாட்டார்கள். 'நாஸப்டினை தினந்தோறும் உபயோகிப்பதால் இந்தத் தொல்லையிலிருந்து விடுதலை பெற முடியும் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டது.

இதய ஓவியம்

—சரோஜா குஞ்சிதபாதம்—

1. தென்றல் வீசியது

அவள் என்னை விரும்பினாள். என்னைமாலையிட தீர்மானித்தாள். தன் உள்ளத்தில் என்னைத்தவிர வேறு யாருக்கும இடமில்லை என்பதை அவள் உணர்ந்திருந்தது எனக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெரியும் என நினைத்துக்கொண்டிருந்தேன்.

நானும் அவளை விரும்பினேன். உயிருக்குச் சம்மாக நேசித்தேன். மணந்தால் அவளை மணப்பது; இல்லையேல் இல்லற வாழ்வில் வேறு ஒருத்தியுடன் நுழைவதில்லை என தீர்மானித்திருந்தேன். இரவும் பகலும் அவள் தோற்றம்; ஒப்பற்ற அழகிய உருவம் என் மனதில் தோன்றித்தோன்றி மறைந்துகொண்டிருந்ததற்குக் காரணம் இல்லாமலில்லை!

அவள் ஈடு இணையற்ற ஒப்பற்ற அழகி. வாளிப்பான உடல். ரோஜா மலரின் செம்மையான நிறம். முகம் தாமரை மலர்போல இருந்தது. ஒரு நிமிடம்கூட, என் ஒரு வினாடிகூட அவள் சுழலும் விழிகள் அமைதியாக இருக்காது. எடுப்பான நாசி அவள் அழகிற்கும் அறிவிற்கும் எடுத்துக்காட்டாக இருந்தது. உயரம் ஐந்தே கால் அடிக்குக் கொஞ்சம் முன்னே பின்னே இருக்கலாம்.

உலகில் ஒப்பற்ற அழகிகள் பலர் இருக்கலாம்! எனக்குஎன்னவோ அவர்களை ஒருமுறை பார்த்தால் மறுமுறை மறந்துவிடும் அளவுக்குத்தான் அவர்கள் எழில் என்றும், ஆனால் இவளுடைய அழகோ, ஒருமுறை கண்டுவிட்டால், ஆயுள் உள்ளவரை மறக்க முடியாது என்ற எண்ணம்.

இவளுடைய அழகு தெய்வீக அழகு. கோவிலில் குடிகொண்டிருக்கும் தெய்வத்தின் அழகுக்கும், அதே கோவிலில் பிரகாரங்களில் வைக்கப்பட்டிருக்கும் மற்ற சிலைகளிடம் உள்ள கவர்ச்சிக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்குமோ, அதைப்போலவே, வெளி உலக அழகிகளின் அழகிற்கும் இவளுக்கும் வித்தியாசம்!

என்னுடைய வாழ்வை முதலில் இன்பக்கனவுகளில் ஆழ்த்தி, பிறகு நிலைகுலைய வைத்ததற்கு அவளே காரணம். அவளுடைய பேரெழிலில் மயங்கி தேன் குடித்த வண்டைப்போல் போதை மீறிக்கொண்டு என்னை நானே நாசமாக்கிக்கொண்டேன். என்னை அவள் கயல்விழியால்

நோக்கி உள்ளத்து உறுதியை தகர்த்து பொடிப்பொடியாக்கி விட்டாள்.

அவள் தன்னுடைய கொவ்வைக்கனி இதழ்களில் புன்னகையை நிறுத்தி, ஓரக்கண்ணுல் பார்க்கும்போது இந்த பார்வையும், அன்பும் எப்போதும் நிலைக்காதா என்று ஏங்கினேன். அவள் என்னைப்பாராத சமயங்களில் என்னை மறந்தாளோ என்ற வருத்தம் எழும்.

அமைதியாக இருக்கும் கடலில், கப்பல் ஒன்று நிதானமாகப் போய்க்கொண்டிருக்கும் வேளையில் எதிர்பாராதவிதமாக, புயல் சுழன்று எழுந்து எப்படி அதை திக்குமுக்காட செய்து கவிழ்த்து விடுமோ, அதைப்போல் அவள் என்னுடைய வாழ்வில் எதிர்பாராத விதமாக குறுக்கிட்டு என்னை ஒரு அமைதியற்ற சூழ்நிலையில் இப்போது நிறுத்தி விட்டாள்.

அரசன் அன்றே கொல்வான்! தெய்வம் நின்று கொல்லும் என்பார்களே! அதைப்போல் காதல் அன்றும் கொல்லும்! தெய்வத்தைப்போல் நின்றும் கொல்லும். காதல் வாழ்வு காதலில் வெற்றி பெற்றவர்களுக்கு இனிமையாக இருக்கலாம். தோல்வியும் மனமுடைவும் சிலருக்கு பரிசாக கிடைக்கலாம்.

ஆனல் எனக்கு இன்று பரிசாக—முடிவாக நின்றது கடந்த கால நினைவுகளே. அன்று அவளோடு நெருங்கி பழகிய காட்சிகள் தான் எஞ்சி நின்றன. பழைய நினைவுகள் என்பது பொதுவாக மனிதருக்கு ஒப்பற்ற செல்வமாகும். இறந்தகால நினைப்புகளே என்னை இப்போது வாழ வைத்துக்கொண்டிருக்கிறது.

மணி பகல் இரண்டிருக்கலாம். மாடியில் ஜன்னல்களெல்லாம் நன்ருக திறந்து வைக்கப்பட்டிருந்தன. தோட்டத்தில் மரங்கள் அமைதியாக சித்திரம் போல் நின்றிருந்தன. காற்றோட்டம் இல்லாத காரணத்தினுல், ஆதவன் தன்னுடைய கிரணங்களை கடுமையாக வீசிக்கொண்டிருந்தான். நான் டாக்டர் மு. வரதராசனுரின் ‘‘மணல் வீட்டில்’’ அதன் சொல் நயத்தில் மூழ்கிக் கிடந்தேன்.

தோட்டத்தில் வேப்பமரத்தின் கிளையொன்றில் இரண்டு காகங்கள் கா...கா...வென கத்திக்கொண்டிருந்தன. உயிரே போவது போல் இரண்டுமாக கா...கா...வென கரைந்துகொண்டிருந்தது எனக்கு மிகவும் வெறுப்பாக இருந்தது. இது என்னடா சனியன் என்று கோபம் மனதில் எழுந்தது. மெல்ல எழுந்து ஜன்னலை நோக்கிச் சென்றேன். அதன் வழியே எட்டிப்பார்த்து உஷ்...உஷ்...என்று கத்தி விரட்டினேன். காகங்கள் ஒன்றரைக் கண்களின் வழியாக சப்தம் வந்த திக்கை நோக்கின. மறு வினடி ஏதோ ஒரு பெரிய ஆபத்து வந்து விட்டதைப் போல் விர் என்று பறந்து போயின.

அவைகளை விரட்டிவிட்டு என் பார்வையை கீழே நோக்கினேன். எனக்கு ஒரு ஆச்சர்யம் காத்துக் கிடந்தது. மெல்ல கைகளால் ஜன்னலின் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு எட்டிப் பார்த்

தேன். என் வீட்டிற்குப் பக்கத்து வீட்டின் வாசலில் இரண்டு மூன்று வண்டிகள் நின்றுகொண்டிருந்தன. நான்கு ஆட்கள் வண்டியிலிருந்து பலவிதமான பொருள்களை அப்புறப் படுத்திக்கொண்டிருந்தனர். பெரிய மர பீரோக்கள், பெட்டிகள், பாத்திரங்கள் காலியாகக் கிடந்த பக்கத்து வீட்டிற்கு யாரோ குடி வருகின்றனர் என்பதை உணர்த்தின.

நாங்கள் இருந்த வீட்டிற்கு பக்கத்து வீடு கொஞ்சம் பெரிய வீடு. இரண்டு வீட்டையும் சுற்றி பெரியதோட்டம். தோட்டத்தில் நிறைய வேப்பமரங்களும் மா மரங்களும் பல வித செடிகளும் இருந்தன. தோட்டத்தைச்சுற்றிலும் சுமார் நான்கடி உயரத்திற்கு காம்பவுண்டு சுவர் எழுப்பப்பட்டிருந்தது. இரண்டு வீடும் ஒரு முதலியாருக்கு சொந்தம். நாங்கள் அதே வீட்டில் நான்கு வருடங்களாக குடி இருந்து வந்தோம்.

என்னுடைய தாயாருக்கும் தங்கைக்கும் ஒரு பெரிய குறை என்னவென்றால் பக்கத்து வீட்டில் யாராவது குடி வந்தால் பேச்சுத்துணைக்கு மிகவும் சௌகர்யமாக இருக்குமே என்று எங்கள் வீட்டு சொந்தக்கார முதலியாரும் என்னையும் என் தந்தையையும் எங்கு சந்தித்தாலும் உங்கள் வீட்டிற்கு அடுத்த வீட்டில் நல்ல மனிதர்களாக, தெரிந்தவர்களாக யாரேனும் இருந்தால்குடிவையுங்களேன் என்று சொல்லிக்கொண்டே யிருப்பார்.

அதன்பேரில் என் தந்தைதன் கூட அலுவலகத்தில் வேலை செய்துவரும் ஒருவரை முதலியாருக்கு அறிமுகப்படுத்தி அந்த வீட்டை அவருக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தார். சமீபத்தில் தான் அவர் சென்னையிலிருந்து அந்த ஊருக்கு மாற்றலில் வந்திருந்தார். வந்த உடனேயே வீடு கிடைத்தது அவருக்கு மிகுந்த சந்தோஷம். என் தந்தைக்கோ அலுவலகத்தில் தன்கூட வேலை செய்யும் ஒருவர் பக்கத்து வீட்டில் குடி வருகிருரே என்ற சந்தோஷம். இதோடு மட்டுமா! அவர்கள் இருவரும் பாலிய சிநேகிதர்களாம்!

அவர்தான் இப்போது தன் குடும்பத்துடன் குடிவந்துகொண்டிருக்கிருர் என்பது எனக்கு தெளிவாயிற்று. பிறகுநான் மீண்டும் கட்டிலில் அமர்ந்துகொண்டு விட்டுப்போன இடத்திலிருந்து 'மணல் வீட்டை'ப்படிக்க ஆரம்பித்தேன். படித்துக்கொண்டே இருந்தவன் அப்படியே தூங்கிப் போய்விட்டேன்.

மணி நான்கிருக்கலாம்! என் தங்கை விமலா என்னை எழுப்பினுள். "என்ன அண்ணு இன்னும் தூங்குகிருய்!" என்ருள்.

மெல்ல எழுந்தேன்.

"விமலா!"

"என்ன அண்ணு?

"பக்கத்து வீட்டிற்கு குடி வந்து விட்டார்களா!

"ஆமாம்! இனி எனக்குக்கூட நன்ருக பொழுது போகும்" என்ருள் மலர்ந்த முகத்துடன்.

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor

(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

●

Please Contact us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

●

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken,

OUR MOTTO IS TO SATISFY OUR CUSTOMERS

“எப்படி?

“அவர்கள் வீட்டில் ஒருபெண் வந்திருக்கிறாள் பார். அப்படி ஒரு அழகானவளை நீயோ அல்லது நானோ இன்றுவரை பார்த்தே இருக்கமாட்டோம். அவள் எப்படி சிரிக்க சிரிக்க பேசுகிறாள் தெரியுமா!

“ஓஹோ!” என்றேன்.

அம்மா காபிடிபன் சாப்பிட கூப்பிடுகிறாள். சீக்கிரம் வா. அதை சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன் என்று கூறிவிட்டு சிட்டுக்குருவிபோல் கீழே ஓடி விட்டாள்.

நான் எழுந்து தலையை வாரிக் கொண்டு கீழே சென்றேன். தாயார் கொடுத்த காபியையும் டிபனையும் சாப்பிட்டு விட்டு வாசலை அடைந்தேன். வெளியே வைத்திருந்த சைக்கிளை துணி ஒன்றால் துடைத்துக் கொண்டிருந்தேன்.

கலகலவென்ற நகைப்பொலி அடுத்த வீட்டிலிருந்து எழுந்தது. காற்றில் மிதந்து வந்தது. என் தங்கைதான் சிரித்திருக்கிறாள். யாரோ வேடிக்கையாக ஏதோ கூறியிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவள் சிரித்திருக்கமாட்டாள். அதோடுமட்டுமல்ல! என் தங்கை எப்போதும்

வாய்மூடி. வாய்விட்டு அவள் சிரித்திருக்கிருள் என்ருள் எதிராளிக்கு திறமை அதிகம் இருக்கவேண்டும்

அங்கு சாமான்கள் அடுக்கப்படும் ஒலியும் இரண்டு மூன்று பேர்களுடைய பேச்சுக் குரலும் கேட்டவண்ணம் இருந்தன. கொஞ்ச நேரத்தில் என் தந்தையின் நண்பர் ரங்கனுதன் வெளியே வந்தார்.

"என்ன சார்? சௌக்கியமா! எப்போது குடி வந்தீர்கள்? வாருங்கள்" என்று வரவேற்றேன்.

"இன்றுதானப்பா வந்தேன். இவ்வளவு நேரமாக உன்னை எங்கே காணவில்லையே!" என்ருர்.

"இவ்வளவு நேரம் மாடியில் தூங்கிக் கொண்டிருந்தேன் சார்" என்று கூறிக் கொண்டிருக்கும் போது என் தந்தை உள்ளேயிருந்து வந்தார்.

"என்ன ரங்கனுதன்! வீடு பிடித்திருக்கிறதா?" என்று கேட்டவண்ணம், தோட்டத்தில் நின்றுகொண்டிருந்த அவரிடம் போனுர். இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டு இருந்தனர். நான் எழுந்து உள்ளே சென்றேன்.

மணி ஐந்திருக்கலாம். சுத்தமாக உடைகளை அணிந்து கொண்டு சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே புறப்பட்ட என்னை என் தாயார், "சீக்கிரமாக திரும்பிவிடு குஞ. இன்று பக்கத்து வீட்டிற்கு குடி வந்திருப்பவர்கள், நம் வீட்டில் இரவு சாப்பிடப் போகிருர்கள்", என்ருள்.

சரி என்று கூறிவிட்டு வெளியே சென்றேன்.

இரவு மணி எட்டிருக்கும் நான் நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பும் போது. இரேழியில் சைக்கிளை நிறுத்தி பூட்டிவிட்டு கூடத்தில் நுழைந்தேன்.

கூடத்தில் பேச்சுக்குரல்கள் கேட்டன. என் தங்கையும் தாயாரும் இன்னும் சிலரிடம் பேசிக்கொண்டிருந்தனர். ரங்கனுதனின் தாயாரும் மனைவியும் வந்திருக்கவேண்டுமென ஊகித்தேன்.

நான் வந்த சப்தத்தைக் கேட்டு கூடத்தில் பேச்சுக்குரல்களின் ஒலி குறைந்தது. அண்ணு வந்துவிட்டார் என்று என் தங்கை கூறினுள்.

கூடத்தில் நுழைந்த எனக்கு அதிசயம் ஒன்று காத்துக்கொண்டிருந்தது.

என்னைக் கண்டவுடன் ரங்கனுதனின் பெண் விருட்டென்று எழுந்து சமையல் அறையில் நுழைந்தாள்.

பெண்ணு அவள்!

மின்னல்போல் அவள் மறைந்தாலும் அவள் அழகு பார்த்த ஒரு விஞடியில் மனதில் அழுந்த பதிந்தது. கட்டான சிவந்த உடலுக்கு சிவப்புப்புடவை இன்னமும் அழகாக இருந்தது. அவளு

டைய மேனியையும்—நறத்தை யும்—முகத்தின்—உடலின் அமைப்பைக் கண்டவுன் என் கண்கள் மறுகின.

நான் கனவிலும் நினைவிலும் கற்பனை செய்துவைத்திருந்த கன்னி கண்ணெதிரில் தோன்றி மறைந்தாள்.

"கண்டார் உயிருண்ணும்

தோற்றத்தான் பெண்டகைப் பேதைக் கமர்த்தன கண்"

வள்ளுவர் கூறியபடி ஒரே விநாடியில் அவளுடைய எழில் என்னைக்கவர்ந்தது. என் தங்கை சொன்னதும் உண்மைதான். தந்தச் சிலையைப்போல் அழகாக இருந்த அவளைப்போல் இனி பிற்காலத்தில் வேறு இடத்தில், வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்பேன என்பதும் சந்தேகம்தான்.

விருவிரென்று மாடிக்குச் சென்றேன். விளக்கைக்கூடபோட மறந்தேன். தோட்டத்தில் இருள் மண்டிக்கிடந்தது. கருமேகக்கூட்டங்கள்போல மரங்கள் தலைவிரித்தாடின. அதன் இடையில் கூடத்திலிருந்து மின்னலென உள்ளே மான்போல் மருண்டு ஓடியவளின் முகம்தெரிந்தது. என்னைப்பித்தம் கொள்ளச் செய்தது.

கண்டதும் காதல் எனகூறுகிறார்களே!

அது இதுதான!

பெண்களின் விஷயங்களில் நான் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பவன். பெண்கள் இருக்கும் இடங்களில் செல்லவே எனக்கு கூச்சமாக இருக்கும். பெண்களுடன் பேசக்கூடிய தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் ஒன்றுவந்துவிட்டால் மனதில் ஒருவித பயத்தை மூடிவைத்துக்கொண்டே, கிலியுடன் பேசக்கூடியவள் நான். அன்றுவரை என் மனதிலே எவளுமே இடம்பெற்றதில்லை.

ஆனல்!

ஏனே இவளைக்கண்டவுடன், ஒரே விநாடியில் என்மனம் அனலில் இட்ட மெழுகைப்போல் கரைத்துவிட்டது. மறுபடி கீழே இறங்கி அவனைச் சென்றுபார்க்க வேண்டுமென்ற ஆவல் கட்டுக்கடங்காமல் எழுந்தது. உடைகளை மாற்றிக்கொண்டேன். கண்ணுடியை எடுத்து தலைகலைந்திருக்கிறதோ என்ற சந்தேகத்துடன் படிய ஒருமுறை வாரி விட்டுக்கொண்டேன். பின் கீழே சென்றேன்.

என் தந்தையும் நண்பரும் வந்துவிட்டனர். எல்லோரும் சாப்பிட்டோம். அவள் சமையல் அறையைவிட்டே வெளியில் வரவில்லை. அவள் எங்காவது தென்படுகிருளா என்று ஒருவரும் கவனிக்காத நேரங்களில் திருட்டுத்தனமாக அடிக்கடி பார்த்தேன்.

என் ஏமாற்றத்தை என்னென்று உரைப்பது? அவளை அன்று இரவு மறுமுறை பார்க்கக் கூடிய சந்தர்ப்பமே கிடைகக வில்லை. இடையே என் தங்கை அவளை அழைத்ததிலிருந்து அவள் பெயர் சாந்தாவென்று அறிந்துகொண்டேன். எனக்கு என்னவோ அவள் எனக்காகப்

பிறந்தவள். எனக்காக வளர்ந்து கொண்டிருக்கிறவள். என்னுடைய வாழ்வை ஒளியேற்ற வந்திருக்கிறவள்போல் ஒரு உள்ளுணர்வு மனதில் எழுந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்தது.

அடுத்த சந்தர்ப்பம் எப்போது வாய்க்குமோ அவனை சந்திக்க என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். ஏங்கிக்கொண்டிருந்தேன் என்று கூறினல் பொருந்தும்.

காலை மணி ஒன்பதிருக்கும்.

எனக்கு அன்று கல்லூரி விடுமுறை.

நான் என்னுடைய நண்பன் ஒருவனுடன் வெளிகாம்பவுண்டு கேட்டின் அருகில் பேசிக்கொண்டிருந்தேன். அவன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு விடை பெற்றுக்கொண்டான். திரும்பி வந்துகொண்டிருந்த போது என்னையறியாமலேயே என் கண்கள், ஏதோ ஒரு காந்தம்போன்ற உணர்ச்சியால் இழுக்கப்பட்டு அடுத்த வீட்டு வாசல்புற அறையின் ஜன்னலை நோக்கி சென்றது.

நிலை தடுமாறினேன்!

ஜன்னலின் வழியே சந்திரனைப்போல முகம் தெரிந்தது. ஈட்டியைப்போல் கூரிய இரு கருவிழிகள் என் மீதுபார்வையை உமிழ்ந்து கொண்டிருந்தன, அந்தக் கண்களில் விவரிக்கவொண்ணாத ஒரு ஆவல்தேங்கிக் கிடந்ததை அறியாமல் போய்விட நான் ஒரு முட்டாள் அல்ல.

ஆனல்!

நான் அவளை பார்த்துவிட்டேன் என்ற காரணத்தாலோ என்னவோ அவள் சடாரென்று மறைந்துவிட்டாள்! வெட்கத்தால் இருக்கலாம்!

விநாடிக்கு விநாடி அவளைப் பற்றிய எண்ணங்கள் என் மனதில் அதிகமாகிக்கொண்டே வந்தன. ஒரு பெண்ணின் மலர்முகம் மனதில் பதிந்துவிட்டால் ஒருவனுக்கு மனநிலை இப்படியா மோசமாகப்போய்விடும்.

என் தங்கை என்னைசாப்பிடக் கூப்பிட மாடிக்கு வந்தாள்.

"விமலா!"

"அண்ணா!"

"அடுத்த வீட்டுப்பெண்உண்மையிலேயே ஒரு ஒப்பற்ற அழகிதான்!"

என் தங்கை என்னை விநோதமாகப்பார்த்தாள். "உண்மையைச் சொன்னல் என்னை ஏன் அப்படிப்பார்க்கிருய்? நான் சொல்லிய பதிலில் ஏதேனும் தவறு இருக்கிறதா?" "ஆமாம் அவள் படித்திருக்கிருள்?" என்ருள்.

"ஸ்கூல் பைனல் பாஸ் செய்திருக்கிருள். இப்போது பாட்டு சொல்லிக்கொள்ள நல்ல பாட்டு வாத்தியாராக இருந்தால் பார்க்கச் சொல்லி அவள் அம்மா கேட்டாள்".

"அப்படியா!" என்றேன். சே ...நாம் ஒருபாட்டு வித்வானக இருக்கவில்லையே என்ற ஏக்கம் எழுந்தது.

மேலும் அவளைப்பற்றி ஏதேனும் கேட்டால் என் தங்கை தவருக ஏதேனும் நினைத்துவிடுவாளோ என்று பயமும் வெட்கமும் எழுந்ததால் அதோடுநிறுத்திக்கொண்டேன்.

(தொடரும்)

கொளத்தூர் பிர்க்கா மண்பாண்ட உற்பத்தியாளர் சங்க ஆண்டு விழா

24—4—60 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணிக்கு சேலம் ஜில்லா கொளத்தூர் பஞ்சாயத்துத் தலைவர் கே. பி. நரசிம்ம ரெட்டியார் அவர்கள் தலைமை வகித்துப் பஞ்சாயத்து போர்டு மூலம் மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு என்னால் இயன்ற உதவிகளை அவசியம் தவராமல் செய்துவருகின்றேன். கொளத்தூர் வாழும் மண்பாண்ட உற்பத்தியாளர் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீமான் கே. எம். ரத்தினவேலு செட்டியார், கொளத்தூர் மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கக் காரியதரிசி, ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்களுக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுத்தார்.

முதல் ஆண்டு விழாவை துவக்கி வைத்து ராஜ்ய மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் திரு. கே. பெருமாள் உடையார் அவர்கள் பேசுகையில் "கொளத்தூர்ப்பகுதியில் வாழும் மண்பாண்ட உற்பத்தியாளர் மற்றமக்களுடன் தொடர்பு கொண்டுவாழ்கின்றனர். அதைப் பார்க்க நான் உண்மையிலேயே பெருமை யடைகின்றேன். மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு சகல வசதிகளையும் கொளத்தூர் பஞ்சாயத்து தலைவர் ஸ்ரீ. கே. பி. நரசிம்மன் அவர்கள் செய்து தருவதை நான் பாராட்டுகின்றேன். ஆகவே சேலம் ஜில்லாவில் வாழும் மண்பாண்ட உற்பத்தியாளர்கள் அனைவரும் கூட்டுறவுச் சங்கம் மூலம் மிகவும் அவசியமான சகல உதவிகளையும் செய்து தர ஸ்ரீ. தர்மலிங்கம் செட்டியார் பி. ஏ. பி. எல். முன்னின்று செய்து கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகின்றேன். மண்பாண்ட உற்பத்தியாளர்கள் இங்குள்ளவர்களுக்கு உண்மையிலேயே தம் தம் தொழிலை செய்வதற்கே வேண்டிய போதிய இட வசதி இல்லை. ஆகவே அவர்கள் தொழில் செய்ய கஷ்டப்படுகின்றூர்கள். மண் கிடைக்கும் இடமும் வசதியில்லாமல் தள்ளி இருக்கின்றது. சூளைக்கு வேண்டிய குச்சுகளுக்கு காட்டிலாகா மிக்கத் தொலைவில் இருக்கிறது. அதற்காகவே சர்க்காரை அணுகினால் அவர்கள் கொளத்தூர் பிரமுகர்களையும் கலந்து ஆலோசித்து அவசியம் வேண்டிய உதவியைச் செய்து கொடுப்பார்கள் என்றும் என்னால் ஆன உதவிக்கு எப்பொழுதும் தயாராய் இருக்கின்றேன் என்றும் முக்கிய கிராம வாசிகளையும் நான் உதவும்படி மிக்க வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்" என்று கூறி முடித்தார்.

ஸ்ரீ வி. தர்மலிங்கம் செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் பேசும்பொழுது "நாங்கள் கொளத்தூர் வாசிகளுடன் இர

ண்டு நாட்களாக தொடர்பு கொண்டு வருகின்றோம். உங்களில் நானும் ஒருவன். சர்க்கார் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு வேண்டிய பல வசதிகளைச் செய்து கொண்டும் இன்னும் செய்யவும் தயாராய் இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என்னாலான உதவிகளைச் செய்ய நான் எப்போதும் தயாராய் இருக்கின்றேன் என்று கூறி முடித்தார்.

ஸ்ரீ வி. அருணகிரி செட்டியார் அவர்களும் ஸ்ரீ கே. ஏ. சுப்பிரமண்யம் அவர்களும் மண்பாண்ட உற்பத்தியாளர் கஷ்டங்களை விளக்கிப் பேசினர். பின்னர் காரியதரிசியால் வந்தன உபசாரம் கூறப்பட்டு 5-45 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது.

—●—

மேட்டூர் மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கம்

24—4—60 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை ராஜ்ய மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கே. பெருமாள் உடையார் அவர்களுக்கும் ஸ்ரீ. வி. தர்மலிங்கம் செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்களுக்கும் மேட்டூர் மண்பாண்ட உற்பத்தியாளர் சங்கச் சார்பில் சங்க ஆலோசகர் ஸ்ரீ. கே. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்பு உரை நிகழ்த்தினர்.

சங்கத் தலைவர் காளியப்பச் செட்டியார் அவர்களும் பொதுக் காரியதரிசி அருணகிரி செட்டியார் அவர்களும் மண்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை விவரமாய் பேசினார்கள். காரிய கமிட்டித் தலைவர் கே. பெருமாள் உடையார் பேசியதாவது:

மேட்டூர் பிர்க்கா சங்கத்தார் அனைவரும் ஒற்றுமையுடனிருந்து தங்கள் தொழிலுக்கு வேண்டிய உதவிகளை சேலத்திலிருக்கும் உதவி டைரகடர் ஆப் இண்டஸ்டிரீஸ் அவர்களிடமும் மற்ற அதிகாரிகளிடமும் பெற்றுத் தங்கள் தொழிலை கஷ்டமின்றி நடத்தவேண்டுமென்றும், அனைவரும் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் சர்க்கார் உதவி பெற்று முன்னேற்றமடையவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சேலம் ஸ்ரீ. வி. தர்மலிங்கம் செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் சேலம் ஜில்லாவில் மண்பாண்ட உற்பத்தியாளருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை எடுத்துக் கூறினார்கள். சர்க்கார் மண்பாண்ட உற்பத்தியாளருக்கு ஏராளமான உதவி செய்து வருகிறார்கள் என்றும், அந்த உதவிகளை எல்லாம் சேலம் ஜில்லா மண்பாண்ட உற்பத்தியாளர்கள் ஒற்றுமையுடனும் கட்டுப்பாடுடனும் இருந்து உற்பத்தியைப் பெருக்கி நாகரீகமான நவீன முறையில் பாத்திரங்களை உற்பத்தி செய்து வருவாயைப் பெருக்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பின்னர் காரியதரிசியால் வந்தன உபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

விமரிசனம் :

பாக்தாத் திருடன்

தயாரிப்பு-சதர்ன் மூவீஸ்

புதுமையான கத்திச் சண்டை—புதிய ஜோடி !

கதை—பழசு!

'பாக்தாத்திருடன்' கதை பழையதுதான். அரச பீடத்தை அபகரிக்க சதி செய்வதும், அரசர் தெரிந்து தன் குழந்தையை வெளியேற்றுவதும், குழந்தை ஆரம்பத்தில் திருடனாவதும், இறுதியில் திருடனே அரசரின் மகன் என அறிந்துகொள்வதும்; இடையிலே காதல் ஏற்படுவதும் முடிவில் சுபம் என்று முடிவதும் திரை உலக சம்பிரதாயம்! அதைப் போல்தான் பாக்தாத் திருடன் கதையும் முடிவு பெற்றிருக்கிறது!

முத்தே-நீ முத்தே !

இக்கதைக்கு ஏ. எஸ். முத்து வசனமெழுதி இருக்கிறார். அடுக்கு மொழி வசனங்கள் அலங்காரமாக இருக்கின்றன. முத்து 'முத்தாக' இரா விட்டாலும் முத்துவின் வசனங்கள் சொத்தையல்ல!! ''வாரே வா'— போன்ற வசனங்கள் ரவீந்தரும் எழுதி இருக்கிறார் என்பதை நினைவு படுத்துகின்றன!

இரண்டொன்று இனிமை !

பாக்தாத் திருடனில் இரண்டொரு பாடல்கள் நெஞ்சை குளிர்

விக்கின்றன. மற்ற பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருக்கின்றன. ஆனால் இதயத்திலே இடம் பெறவில்லையே!!

புதிய ஜோடி!

எழிலரசி வைஜெயந்திமாலாவும் புரட்சி நடிகரும் இதில் 'ஜோடி' சேர்ந்திருக்கின்றனர். ஜோடிப் பொருத்தம் கண்களுக்கு ரம்மியமாக இருக்கிறது. காதல் காட்சிகளில் புதிய ஜோடிகள் தங்கள் திறமையை எடுத்துக் காட்டி யிருக்கின்றனர், நடிப்பில்! வைஜயந்திமாலாவின் ஆட்டமும் நடிப்பும் காட்சிக்கு காட்சி மெருகேற்றுகின்றன!

புரட்சியின் புது நடை!

எம். ஜி. ராமச்சந்திரன் பாக்தாத் திருடன் அபுவாக நடித்திருக்கிறார். தடித்தஉருவம்-அவர் ஏற்றிருக்கும் புது பாத்திரம்! கத்திச்சண்டையை புதியபாணியில், ரசிகர்களை மகிழ்விக்கும் வகையில் செய்திருக்கிறார். நடிப்பிலும் புதுமை முத்திரைகள் பல இடங்களிலே பதிந்திருக்கின்றன.

பாலைய்யா உனக்கு நிகர் யாரைய்யா?

பாக்தாத்தை கைப்பற்றிக் கொள்ளும் காசிம் ரஸ்வியாக பாலையா திறம்பட நடித்திருக்கிறார். தளபதியை தண்டித்து'உன்னைத் திட்டித்திட்டி என் நாக்குகூட பாதியாகிவிட்டது' என்று பேசும்போது அவர் நடிப்பைக் கண்டு, "பாலையா உனக்கு நிகர் யாரையா?" என்று சொல்லத் தோன்றுகிறது! சந்தியா அடிக்கடி சோபாவில் உட்காருகிறார்—எழுந்து நடக்கிறார்!

அப்பாவி அசோகன்

அப்பாவி தளபதியாக அசோகன் வருகிறார் - போகிறார். அவரது நடிப்பில் அன்று முதல் இன்று வரை முன்னேற்றமே இல்லை!

சளைக்கவில்லை

ஐதராக நம்பியார் நடித்திருக்கிறார். எம். ஜி. ஆரோடு ஆவேசமாக சண்டை போடும் போதும், காதலில் அடிக்கடி தோல்வி காணும்போதும் நடிப்பின் உச்சகட்டத்திற்கு போகிறார். இரண்டில் எதிலும் சளைக்கவில்லை!

அலங்கார மேடை!

அமைச்சர் மகள் ஜுபேதாவாக - அழகு மேடையாக எம். என். ராஜம் அடிக்கடி தோன்றுகிறார். அபுவின் காதலுக்காக ஏங்கித்தவித்து இறுதியில் ஏமாற்றமடைகிறார்.

நகைச்சுவை ஜோடி!

ரசிகர்களை சிரிக்கவைக்கின்ற பெரும் பொறுப்பை டி. ஆர். ராமச்சந்திரனும், எம். எஸ். எஸ். பாக்கியமும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். பாக்கியம் ரசிகர்களை ஏமாற்றினாலும், டி. ஆர். ராமச்சந்திரன் ஏமாற்றவில்லை!

சபாஷ் சாமி!

பாக்தாத் திருடனுக்கு ஒளிப்பதிவாளரான கிருஷ்ணசாமி தன்

குணச்சித்திர நடிகர் டி. எஸ். முத்தைய்யா, ஞானேதயம் பிக்சர்சார் தயாரிக்கும் ''பத்மாவதி'' செட்டில் வசனகர்த்தா ஆதிமூலம், டைரக்டர் கே. சுந்தரம் ஆகியவர்களுடன்.

திறமையை முழுவதும் காட்டியுள்ளார். எம். ஜி. ஆர்—நம்பியார் கத்திச்சண்டைக்கு உயிர் கொடுக்கிறது இவரது திறமை! வெளிப்புறக்காட்சிகள் கதையை வேறு திக்கிற்குகொண்டு போகாமல் காக்கின்றன. ஒளிப்பதிவு உயர்ந்த முறை—பாராட்டுக்குரியவர்!

டைரக்ஷன்

இதை டைரக்ட் செய்திருக்கும் டி. பி. சுந்தரம் பல துறைகளுக்கு ஆளாகி இருக்கிறார் என்றாலும், படத்தின் சுறு சுறுப்பு அவைகளை மறக்கச் செய்து விடுகின்றன. மொத்தத்தில் டைரக்ஷன் தரமாக அமைந்திருக்கிறது!

நடனம் கண்ணுக்குரம்மியமாக இருக்கிறது.

ரசிகர்களுக்கு

ரசிகர்களே! நீங்கள் கொடுக்கும் பணத்திற்கு நஷ்டமில்லை. கண் கவர் ஜோடி—கத்திச் சண்டை அத்தனையும் இருக்கிறது! கத்திச் சண்டை ரசிகர்களுக்கு கச்சிதமான ரசனைப் படம் 'பாக்தாத் திருடன்'.

'சரசு'

பட உலகத் திருமணங்கள்

குமரன்—பத்மாவதி
சரவணன்—முத்துலக்ஷ்மி

பிரபல படத் தயாரிப்பாளர் திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் குமாரர்களான திரு குமரன், திரு சரவணன் ஆகியவர்களுக்கு வெகு விமரிசையாக திருமணம் நடைபெற்றது.

மணமக்கள் குமரன்-பத்மாவதி, சரவணன் - முத்துலக்ஷ்மி. திருமணம் வெகு விமரிசையாக கோடம்பாக்கம் ஏ. வி. எம். ஸ்டுடியோவில் நடைபெற்றது. அன்று மாலை வசந்தகுமாரி இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

திருமணத்திற்கு மாநில முதலமைச்சர் கனம் காமராசர், அமைச்சர்பக்தவத்சலம், மற்றும் கலைஉலகப்பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர்.

வாழ்க மணமக்கள் என்று நாமும் வாழ்த்துகிறோம்!

* * *

வெங்கட்ராமன்—வசுந்தரா!

காலஞ்சென்ற வி. எல். நரசுவின் மகன் வெங்கட்ராமனுக்கும், ஈ. பி. பி. ஹரன் அவர்களின் செல்வி வசுந்தராவுக்கும் வெகு விமரிசையாக கோவையில் நடைபெற்றது!

திருமணத்தை யொட்டி சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டலில் வரவேற்பு ஒன்று நடைபெற்றது.

★

யாரை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாரோதெரியவில்லை. பி.எஸ்.வி. பிக்சர்ஸ் அளிக்கும் "வீரக் கனல்" படத்தில் நடிகர் ஜெமினி.

★



வளரும் படங்கள்

ராணி சம்யுக்தா

ஏ. சி. பிள்ளை தயாரித்து வரும் ராணி சம்யுக்தா படம் சுமார் 9, 500 அடிகள் வரை முடிந்திருக்கின்றது. அண்மையில் சம்யுக்தையின் திருமணம் பற்றி அரசசபையில் தன் மந்திரியிடம் ஆணை பிறப்பிக்கின்ற காட்சி வாஹினி ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது!

அன்றைய காட்சியில் என். எஸ். நாராயண பிள்ளையும், சஹஸ்ரநாமமும் நடித்தனர். இதில் காதல் ஜோடியாக பத்மினியும், எம். ஜி. ராமச்சந்திரனும் நடித்து வருகின்றனர். கதை வசனத்தை கவிஞர் கண்ணதாசன் எழுதியுள்ளார். இதை யோகானந்த் டைரக்ட் செய்து வருகிறார்,

மாதா பிதா குருதெய்வம்

ஏழுமலையான் பிக்சர்சாரின் 'மாதாபிதாகுரு தெய்வம்' படப்பிடிப்பு மீண்டும் துவங்கி இருக்கிறது!

அண்மையில் எம். என். ராஜம் தன்தோழிகளுடன் நடனமாடுகின்ற காட்சி படமாக்கப்பட்டது. இதில் சௌகார் ஜானகி, எஸ். எஸ். ராஜேந்திரன், பிரேம் நசீர். மற்றும் பலர் நடித்துவருகின்றனர். இதை கே. சோமு டைரக்ட்செய்து வருகிறார்.

கங்கா புரடக்ஷன்ஸ் முதல் தயாரிப்பு!

கங்கா புரடக்ஷன்சாரின்முதல் தயாரிப்பின் துவக்க விழா கடந்த மாத இறுதிவாரத்தில் மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் நடைபெற்றது. அன்றையத்தினம் எம். என். நம்பியார், லக்ஷ்மிராஜம் சம்மந்தப்பட்டக் காட்சி படமாக்கப்பட்டது. அதில் பி. சரோஜா தேவியும், ஜெமினி கணேசனும் காதல் ஜோடிகளாக நடிப்பார்கள். இந்தக் கதை 'பெதார்த் ஜமானு க்யா ஜானே' என்னும் இந்திக் கதையின் தழுவலாகும். இதை டி. எஸ். ராஜகோபால் டைரக்ட் செய்கிறார்.

பிறந்த நாள் கொண்டாட்டம்!

பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது குழந்தைகளுக்கு 'சாக்லெட்' வழங்கும் காட்சி அண்மையில் 'பிறந்த நாள்' படத்திற்காக மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

கதை-வசனம் உசிலை சோமநாதன் எழுதி இருக்கும் இப்படத்தில் எம். என். ராஜம், பிரேம் நசீர் முக்கிய கதா பாத்திரங்களாக நடித்துவருகிறார்கள். இதைக் கே. நாராயணன் டைரக்ட் செய்து வருகிறார்.

சிவ லீலா

எம். ஏ. வி. பிக்சர்சாரின் 'சிவ லீலா' படம் கலர் தயாரிப்பாகும். இதன் படப்பிடிப்பு



குளத்தில் தண்ணீரை அள்ளித்தெளித்து விளையாடும் காதலர்கள் சிவாஜியும், ஜமுனாவும், ஸ்ரீ கணேஷ் பிரசாத் மூவிடோன் அளிக்கும் "மருதநாட்டு வீரன்" படத்தில்.

வெகு வேகமாக சேலம் ரத்னா ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது.

இதில் சிவாஜி கணேசன் சிவனாகத் தோன்றி பல பாகங்களை ஏற்று நடிக்கிறார். மற்றும் எஸ். வி. சுப்பையா, டி. கே. சண்முகம், டி. கே. பகவதி, எம். என். நம்பியார், டி. எஸ். துரைராஜ், பக்கிரிசாமி, ஏ. கருணாநிதி, என். டி. ராமாராவ், பத்மினி, சரோஜாதேவி, தேவிகா, சந்தியா, கண்ணாம்பா மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இதன் கதை வசனகர்த்தாவான ஏ. பி. நாகராஜன் அவர்களே இந்த டைரக்ட் செய்து வருகிறார்.

208375

மாலையுடன் இருக்கும் மணமக்களைப் பற்றி ரசிகர்களுக்குக் கூ
தேவையில்லை. ஸ்ரீ கணேஷ் மூவிடோன் தயாரிக்கும் "வைஜய
மாலா"வில் டி. ஆர். மகாலிங்கமும், எம், என். ராஜமும்.

வளரும் நாடகங்கள்

கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்கினர்

சென்னை நற்றமிழ் நாடக மன்றத்தாரின் கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினர்" என்ற நாடகத்துவக்க விழா அண்மையில் நடைபெற்றது.

தென்னிந்திய நடிகர் சங்கச் செயலாளர் டி. என். கிருஷ்ணன் எம். சி. தலைமைவகித்தார். இ. ஆர். பாலசுந்தரம் எம். சி. கு. இராமதாசு. சி. சிறுவை. மோகனசுந்தரம், கா. வேழவேந்தன், பா. ஆசைமுத்து புலவர். தணிகை உலகநாதன், ஆர். எஸ். பாபு ஆகியோர் பேசினர்.

கதையை நா. ஜகந்நாதன் எம். ஏ. எழுதியுள்ளார். வசன பாடல்களை பி. வி. கிரி எழுதி யுள்ளார். பயிற்சி ஏ. வரதராசன்.

பிறந்தது போதும்

வண்ணை கே. ஆர். ஆ மன்றத்தினர் எழுத்தாள 'கௌந்தியின்' 'பிறந்ததுபே தும்' என்னும் நாடகத்தை நடத்தவிருக்கின்றனர். இ நாடகத்திற்கானபாடலை கௌந், எழுதிவருகிறார். இதில் தோழ கள் பாலையா, கே. ஆர். ராம தாஸ், தோழியர் லீலாவதி ம றும் பலர் நடித்து வருகின்றன

இந்நாடகம் விரைவில் (ணை, தியாகராயர் கல்லூரி கில் அரங்கேற்றமாகவிருக்கி

Edited & Published by K. Perumal Udayar,
55, Edapalayam Street, Madras-3
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press,30, Edapalayam Street; Madr